பக்கங்கள் : பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 வைகாசி 32 சனிக்கிழமை (14.06.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 199

## வெட்டு ஒன்று துண்டு இரண்டாகக் கூறுகிறார் ஜனாதிபதி

# ஆயுதங்களைக் கைவிட்டாலே விடுதலைப் புலிகளுடன் பேச்சு



## இந்த நிபந்தனையை ஏற்றாலும் பிரபாகரனுடன் சமாதான ஒப்பந்தம் எதுவும் செய்யமாட்டேன்

லண்டன், ஜூன் 14

தமிழீழ விடுதலைப்புலிகள் ஆயுதங்களைக் கைவிட்டால் மட்டுமே, அவர்களுடன் அரசாங் கம் பேச்சுவார்த்தை நடத்தும். அவர்கள் பேச்சுக்களில் ஈடுபடுவதற்கு விரும்பினால் முதலில் ஆயு தங்களைக் கைவிடவேண்டும்.

இவ்வாறு லண்டனில் வைத்து "த ரைம்ஸ்" பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வெட்டு ஒன்று துண்டு இரண்டாகக் கூறியிருக்கிறார்.

அது மட்டுமன்றி புலிகள் தனது இந்த நிபந்தனையை ஏற்றுக் கொண்டாலும் கூட, புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் சமாதான ஒப்பந்தம் எதையும்செய்யப்போவதில்லை என்றும் ஜனாதிபதி திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கின்றார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# 'ஹைஏஸ்' வானை கடத்திவந்த ஆயுததாரிகள் சிறைச்சாலை வாகனத்தை வழிமறித்து ஏறிச் சூடு!

## சுன்னாகத்தில் நடைபெற்ற திகில் சம்பவத்தில் 2 கைதிகள் பலி!!

யாழ்ப்பாணம், ஜூன் 14

பருத்தித்துறை நீதிமன்ற விசாரணைக்கு சந்தேகநபர்களை அழைத்துச் சென்ற சிறைச்சாலை வாகனம் சுன்னாகத்தில் வைத்து வழிமறிக்கப்பட்டது. அங்கு காத்திருந்த ஆயுததாரிகள் சிறைச்சாலை வாகனத்துக்குள் ஏறி கைதிகள் இருவரைச் சுட்டுக்கொன்று, மற்றொருவரைக் காயப் படுத்திவிட்டுத் தப்பிச் சென்றனர்.

இத்திகில் சம்பவம் நேற்றுக் காலை 9 மணியளவில்சுன்னாகம் - புன்னாலைக்கட்டுவன் வீதியில், ரயில் நிலையத்துக்குச் சமீபமாக அரங்கேறியுள்ளது.

யாழ். சிறைச்சாலையில் இருந்து மல்லாகம், பருத்தித்துறை நீதிமன்றங்களின் வழக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையை ஒத்திவைப்பதற்குத் தீர்மானம்

கொழும்பு, ஜூன் 14

ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சையை இரு தினங்களால் ஒத்திவைப்பதற்கு பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் தீர்மானித்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. சம்பள அதிகரிப்பு கோரி ஆசிரியர்கள் நடத்தி வரும் போராட்டம் மற்றும் இலங்கையில் நடைபெறவுள்ள சார்க் உச்சிமாநாடு என்பனவற்றின் காரணமாகவே உயர்தரப் பரீட்சையை ஒத்திவைப்பதற்குத் தீர்மானிக்கப் பட்டுள்ளது எனவும் கூறப்படுகின்றது.

பரீட்சை ஆரம்பமாகும் புதிய திகதி பற்றிய இறுதித் தீர்மானம் எடுக்கப்பட்ட

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மாகாண விளையாட்டுப் போட்டியை ஒருவாரத்தில் வவுனியாவில் நடத்த ஏற்பாடு

### யாழ்.மாணவர்களும் பங்கேற்க வசதி

யாழ்ப்பாணம், ஜூன் 14

யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த பாடசாலைகள் பங்குபற்றும் வகையில் மாகாண மட்ட விளையாட்டுப் போட்டியை வவுனியா வில் ஒருவார காலத்துக்குள் நடத்த மாகாணக் கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள் ளது.

வவுனியாவில் இன்று ஆரம்பமாக விருந்த வடக்கு மாகாண மட்ட விளையாட்டுப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

### தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண

# நாடாளுமன்ற அதிகாரத்தை புதிய அரசிடம் ஒப்படைக்க கோருகிறார் ரணில் விக்கிரமசிங்க

கொழும்பு, ஜூன் 14

தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக நாடாளுமன்ற அதிகாரத்தை உடனடியாகப் புதியதொரு அரசிடம் ஒப்படைக்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நாடாளுமன்றத்தைக் கலைக்கும் திகதியைத் தீர்மானிப்பது குறித்து முடிவெடுப்பதற்காக அரசு தம்முடன் பேச முன்வர வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்தார். (12 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.போதனா வைத்தியசாலையில் புதிதாக தொலை மருத்துவ சேவை நேற்று ஆரம்பம்

### சர்வதேச டாக்டர்களுடன் தொடர்புகொண்டு சிகிச்சை வழங்க வசதி

யழ்ப்பாணம், ஜூன் 14

சர்வதேச மருதத்துவர்களுடன் தொடர்பு கொண்டு, நோய் விவரம் மற்றும் பராமரிப்பு தொடர்பான தகவல்களைப் பரிமாற வசதியாக தொலை மருத்துவ சேவை (TELE MEDICINE SERVICES) நேற்று யாழ். போதனாவைத்தியசாலையில் ஆரம்பிக்கப் பட்டுள்ளது.

யாழ்.மருத்துவ சங்கத்தினர் சாவதேச மருத்துவ சுகாதார நிறுவனத்தினரின் (I.M.H.O) ஆதரவுடன் இந்த சேவையை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கனேடிய மாணவன் இலங்கையில் கைது!

கொழும்பு, ஜூன் 14

கனடாவை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட மாணவரொருவர் இலங்கையில் வைத்து பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கனடா ரொறண்டோவைச் சேர்ந்த கஜன் இரம்பைமூர்த்தி (வயது - 20) எனும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மாணிக்கக் கல் வர்த்தக நிலையத்தை

# கொள்ளையிட்டவர்கள் எறிந்த வெடிகுண்டில் அறுவர் படுகாயம்

கொழும்பு, ஜூன் 14

இரத்தினபுரி பெல்மதுல்ல மொரத் தொட்ட என்ற இடத்தில் உள்ள மாணிக் கக்கல் வியாபார நிலையத்திற்குள் நேற்று நுழைந்த கொள்ளையர்கள் இருவர் துப் பாக்கி முனையில் ஒரு லட்சம் ரூபா பணத் தையும், சுமார் 10 லட்சம் ரூபா பெறுமதி வாய்ந்த மாணிக்கக்கற்களையும், 02 கையடக்கத் தொலைபேசிகளையும் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

அச்சந்தர்ப்பத்தில் அந்த இருவரையும் பிடிக்கச் சிலர் முற்பட்டபோது அவர்கள் மீது கைக்குண்டொன்றை வீசிவிட்டு கொள்ளையர்கள் மோட்டார் சைககிளில் ஏறித் தப்பிச் சென்றுவிட்டனர் என்றும், வீசப்பட்ட கைக்குண்டு வெடித்ததால் ஐந்து பேர் காயமடைந்து வைத்தியசாலை யில் சேர்க்கப்பட்டனர் என்றும் இரத்தின புரி பொலிஸார் நேற்றுத் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பாக இரத்தினபுரி பொலிஸார் மேலும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர் என்றும் தெரி விக்கப்பட்டது.

(சி)

## தென்மராட்சி வலயத்தில் சமய அறிவுப் போட்டி

யாழ்ப்பாணம் ஜூன் 14

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை களில் தரம் 6 தொடக்கம் தரம் 13 வரையி லான வகுப்புக்களில் சைவசமய பாடம் கற் கும் மாணவர்களுக்கு சமய அறிவுப்போட்டி கள் (எழுத்துப்பரீட்சை) விரைவில் வலய மட்டத்தில் நடத்தப்படவுள்ளன.

பாடசாலை மட்டத்தில் இப் போட்டி களை நடத்தி வகுப்பு ரீதியில் முதல் இரு இடங்களைப் பெறும் மாணவர்களின் விவரங் களை அடுத்தமாதம் பத்தாம் திகதிக்கு முன் னர் அனுப்பிவைக்குமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள் ளார். (1-207)

## வவுனியாவில் 2 படையினர் சுட்டுக்கொலை

வவுனியா, ஜூன் 14

வவுனியா, பறையனாளங்குளம் - மதவாச்சி பிரதான வீதியில் உள்ள இராணுவக் காவலரண் மீது நேற்றுப் பிற்பகல் 12.50 மணி யளவில் விடுதலைப் புலிகளால் திடீரென மேற்கொள்ளப் பட்டதாகக் கூறப்படும் துப்பாக்கிப் பிரயோகத்தில் இராணுவத் தினர் இருவர் உயிரிழந்தனர்.

அப்பகுதியில் உள்ள பற்றை ஒன்றுக்குள் மறைந்திருந்த விடு தலைப் புலிகளின் உறுப்பினர் ஒருவர் ரி-56 ரகத் துப்பாக்கியால் இராணுவத்தினரை நோக்கிச் சுட்டார் என்று படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது.சம்பவத்தைத் தொ டர்ந்து அப்பகுதியில் இராணுவத்தினர் தேடுதல் மேற்கொண்டு வருகின்றனர் என்றும் கூறப்பட்டது. (சி)

## அரசாங்க அறிவித்தல்

### வெற்று பரல்கள் விற்பனை செய்வதற்கான கூறுவிலை கோரல்

கோண்டாவில் அரச உணவுக் களஞ்சியத்தில் தேங்காய் எண்ணெய் வெற்று பரல்கள் 387 இருப்பாக உள்ளன. இவ் வெற்றுப் பரல்களை விற்பனை செய்வதற்கான முத்திரையிடப் பட்ட (Sealed) கூறுவிலைகள் யாழ்ப்பாணம் அரசாங்க அதிபரி னால் கோரப்படுகின்றன. இந்த பரல்களை கொள்வனவு செய்ய விரும்புபவர்கள் விண்ணப்பப்படிவத்தை புனர்வாழ்வு கிளை யில் பெற்று தபால் உறையின் மேல் மூலையில் 'வெற்று பரல் களை விற்பனை செய்வதற்கான கூறுவிலை' எனக் குறிப் பிட்டு 25.06.2008 ஆம் திகதி 10 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடிய வாறு புனர்வாழ்வுப் பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியில் நேரடியாக அல்லது பதிவுத் தபால் மூலம் சீல் (Seal) இடப் பட்ட கடித உறையில் தங்களது கூறுவிலைகளை சமர்ப்பிக் குமாறு கோரப்படுகின்றார்கள்.

வெற்று பரல்களைப் பார்வையிட விரும்புபவர்கள் கோண் டாவில் அரச உணவுக் களஞ்சியத்தில் வேலை நாள்களில் காலை 9.மணி தொடக்கம் பி.ப. 3.00 மணிவரை பார்வையிட லாம்.

கூறுவிலைகள் 25.06.2008 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு திறக்கப்படும். இதில் கூறுவிலை சமர்ப்பித்தவர் அல்லது அவ ரின் பிரதிநிதி சமுகமளிக்க முடியும்.

வெற்று பரல்களை எடுப்பவர்கள் மாவட்டச் செயலக இலங்கை வங்கி கிளையில் பணத்தை உடனடியாகச் செலுத்தி பொருள்களை உடனடியாக களஞ்சியத்தில் இருந்து அகற்ற வேண்டும்.

கேள்விச் சபையின் முடிவே இறுதியானது.

**க.கணேஷ்**
அரசாங்க அதிபரும் (A)
மாவட்டக் கேள்விச் சபைத் தலைவரும், யாழ்.மாவட்டம்.

## சுகாதாரப் பணிப்பாளரின் அவசர வேண்டுகோள்

சங்கானை வைத்தியசாலையில் நேற்று வெள்ளிக்கிழமை குழந்தை ஒன்றைப் பிரசவித்து பின்னர் வீடு சென்ற தாயை சுகாதார சேவைகள் பணிப்பாளரை உடன் சந்திக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள் ளது.

யாழ்ப்பாணம், கே.கே.எஸ்.வீதியைச் சேர்ந்த கௌரிராம் தபோதினி என்பவர் நேற்று மு.ப. 11.30 மணிக்கு அனுமதிக் கப்பட்டு 2 மணிக்கு குழந்தையை பிரசவித்து 4 மணிக்கு வீடு சென்று விட்டார். அவரை யும் கணவரையும் உடன் வந்து சந்திக்கு மாறு யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் கேட்டுள்ளார். (அ-1)

## உடற்கல்வி செயலமர்வு

யாழ்ப்பாணம், ஜூன் 14

தென்மராட்சி கல்வி வலயப் பாடசா லைகளில் தரம் 8 வகுப்புகளில் சுகாதார மும் உடற்கல்வியும் பாடம் கற்பிக்கும் ஆசிரிர்களுக்கான செயலமர்வு இன்று சனிக்கிழமை வரணி ஆசிரிய மத்திய நிலையத்தில் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார். (01-207)

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூன் 14

ஏழாலை மேற்கு சைவசன்மார்க்க வித் தியாலயத்தின்பரிசளிப்புவிழாநாளைஞாயிற் றுக்கிழமை காலை 9மணிக்கு வித்தியாலய அதிபர் செ.சிவநடராசா தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் கலந்து கொள்வார். (01)

## மோட்டார் சைக்கிள் விபத்துக்களில் பெண் உட்பட இருவர் காயம்

யாழ்ப்பாணம், ஜூன் 14

மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் காயமடைந்த வெவ்வேறு சம்பவங்கள் நேற்று தென்மராட்சி பிரதேசத்தில் இடம் பெற்றன.

வரணி, குடமியனில் மோட்டார் சைக் கிள் சில்லுக்குள் சேலை அகப்பட்டு தூக்கி வீசப்பட்டதில் அதே இடத்தைச் சேர்ந்த சி.சுகந்தினி (வயது 37) என்னும் இரு பிள் ளைகளின் தாயும்.-

எதிரே வாகனம் வந்த போது வீதியோர மாகச்சென்ற மோட்டார் சைக்கிள் சில்லு சறுக்கியதில் தூக்கி வீசப்பட்டு சாவகச் சேரி, சங்கத்தானையைச் சேர்ந்த கே.பிரதீபன் (வயது 18) என்பவருமே காயமடைந்தவர் களாவர்.காயமடைந்தவர்கள் சாவகச்சேரி ஆதார வைத்திய சாலையில்சிகிச்சை பெற்று வருகின்றனர். (1-207)

## இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கம்
## மாவட்டச் செயலகம் - யாழ்ப்பாணம்

### கேள்வி அறிவித்தல்

யாழ்.மாவட்டச் செயலக புனர்வாழ்வுப் பகுதியின் நாவற்குழி களஞ்சியத்தில் பின்வரும் கட்டட நிர்மாண வேலை களைக் கையாளுதல் சம்பந்தமான கேள்விப் பத்திரங்கள் பொருத்த மான கேள்விதாரரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்றன.

1. களஞ்சியத் திருத்தங்கள்
2. துவிச்சக்கர வண்டி நிறுத்தும் நிலையம் அமைத்தல்
3. 1000 கலன் நீர்த்தாங்கி அமைத்தல்
4. காவலாளி அறைகள் 02 அமைத்தல்
5. சிற்றூண்டிச் சாலை அமைத்தல்
6. பெயர்ப் பலகை அமைத்தல்

மேற்படி கேள்வி கோரலின்போது மீளளிக்கப்படாத கேள் விக் கட்டணம் ரூபா 1000 மீளளிக்கும் தொகை ரூபா 100,000 ஆகும்.

கேள்வி ஆவணங்களையும் ஏனைய தகவல்களையும் சாதா ரண வேலைநாள்களில் முற்பகல் 9.30 முதல் 12 மணி வரையும் பிற்பகல் 1.30 முதல் 3.30 மணி வரையும் 16.6.2008 முதல் 27.06. 2008 வரையும் கணக்காளர் புனர்வாழ்வுப் பகுதியிடம் பெற்றுக் கொள்ளலாம். முடிவு திகதிக்கு முந்தியதினம் வரை குறிப் பிட்ட வேலை தொடர்பாக களஞ்சியத்தைப் பார்வையிடவும் முடியும்.

கேள்விகள் 27.06.2008 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு திறக் கப்படும். கேள்விகள் திறக்கப்படும்வேளை கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம்பெற்ற பிரதிநிதிகள் சமுக மளிப்பதற்கு அனுமதிக்கப்படுவர்.

பொறியிடப்பட்ட கேள்விகள் '*தலைவர், மாவட்டச் செய லக கேள்விச் சபை, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்* என முகவரியிடப்பட்டு மாவட்ட செயலக புனர்வாழ்வுக் கிளையின் கேள்விப் பெட்டியில் இடவேண்டும். அல்லது பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைத்தல்வேண்டும். பிந்திய கேள்விப் பத்திரங் கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப் படமாட்டா.

தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் 'நாவற்குழி அரச உணவுக் களஞ்சிய திருத்தவேலைகள்' என குறிப்பிடல் வேண்டும். கேள்வி தாரரின் தரம், கட்டட நிர்மாணித்தல் இக்ராட் தரம் M6 மேற்பட்டதாக இருப்பதுடன் கேள்வி ஆவ ணங்கள் வர்த்தக தலைப்புடனான கடிதம் ஒன்றினைச் சமர்ப் பித்தல் மூலம் மாத்திரமே பெற்றுக்கொள்ளமுடியும்.

**க.கணேஷ்**
அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம் (B)

### வீடும் காணியும் விற்பனைக்குண்டு

உரும்பிராய் கற்பகப் பிள்ளையார் கோவில் வீதியில் அமைந்துள்ள 5 பரப்பு காணியும் அதற்குள் இருக்கும் பெரிய 6 அறைகள் கொண்ட வீடும் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு: 0112[illegible]
இந்திரா மகேஸ்வரி, 45, சென்மேரிஸ் லேன், மட்டக்குளி, கொழும்பு - 15.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணுலகம் 05 11 1927



விண்ணுலகம் 14 06 2007

**அமரர் உலகநாதன் கந்தசாமி பத்தர்**

*மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வையகம்.*

யாழ்ப்பாணம், வண்.வட மேற்கு நாச்சிமார் கோயிலடியில் பிறந்து வாழ்ந்தவரும் இறுதிக் காலத்தில் லண்டனில் வசித்த வருமாகிய அமரர் உலகநாதன் கந்தசாமி பத்தர் அவர்களின் இந்த முதலாம் ஆண்டு நினைவு நாளில் அன்னாரின் ஆத்மா சாந்தி யடைய இறைவனை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

## கண்ணீர் அஞ்சலி



அளவெட்டி மல்லாகம் ப.நோ.கூ.சங்க பணியாளர் செ.சந்திரராசா அவர்களின் அன்புத் தாய்

**செல்லத்துரை இராசமணி**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும் பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பது டன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

அளவெட்டி - மல்லாகம்
(75313) ப.நோ.கூ.சங்க ஊழியர் நலன்புரிச் சங்கம்.

## மரண அறிவித்தல்

### வல்லிபுரம் தம்பையா



வல்லிபுரம் தம்பையா நேற்று (13.06. 2008) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவக்கொழுந் தின் அன்புக் கணவரும், கமலாம்பிகை, கணேசலிங்கம், அன்னலிங்கம், இராசாம் பிகை, பாலாம்பிகை, இராசலிங்கம், காலஞ் சென்ற விமலாம்பிகை, பஞ்சலிங்கம், பரம லிங்கம், இந்திரலிங்கம் ஆகியோரின் அன் புத் தந்தையும், சுப்பிரமணியம், ஜெயராணி, இராசலட்சுமி, பரராஜசிங்கம், பிரபாபதி, மீரா, இந்திராணி, மதிவதனி ஆகியோரின் மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.06.2008) சனிக் கிழமை மு.ப. 9 மணிக்கு இல.74, மலர்மகள் வீதி, அரியாலை யில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
த.இராசலிங்கம் (மகன் - பிரதிக் கல்விப் பணிப்பாளர், யாழ்.கல்வி வலயம்).

(75309)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செயற்கை உரங்களின் மட்டற்ற பாவனையால் நஞ்சூட்டப்பட்ட காய்கறிகளை உட்கொள்ளும் துர்ப்பாக்கிய நிலையில் யாழ்ப்பாண மக்கள்

சேதனப்பயிர்ச்செய்கை என்பது பழமை வாய்ந்த விவசாயத்தின் அனுபவத்து டன் சூழலிலுள்ள இயற்கை வளங்களைப் பயன்படுத்தி, சூழலுக்குப் பாதிப்பு ஏற்படா தவாறு பொருத்தமான தொழில்நுட்ப



கூடைமுறையில் கூட்டெரு தயாரிப்பதைப் பார்வையிடும் விவ்சாய உத்தியோகத்தர்கள்.

முறைகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப் படும் பயிர்ச்செய்கை ஆகும். இம்முறை யில், மண்ணரிப்பைக் குறைத்து மண் வளத்தைப் பேணுவதுடன் மண்ணில் நீரும், காற்றோட்டமும், பயிர்ப்போசணைப் பொருள்களும் தங்கி நிற்கக்கூடிய வகை யில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படும். இங்கு, விவசாய இரசாயனப் பொருள்கள் மற்றும் செயற்கை உரங்கள் என்பவற் றின் பாவனையின்றி எல்லாக் கழிவுகளை யும் மீள்சுழற்சிக்குட்படுத்தி உபயோகப் படுத்துவதுடன் உயிரினங்களின் பல்

## சேதனப் பயிர்ச்செய்கையை விரிவாக்குவதே . இதனைத் தடுப்பதற்கான ஒரே ஒரு வழி

வகைத் தன்மையை பேணுவதிலும் உயர் கவனம் செலுத்தப்படும். இச்செயற்பாடு களைக் கடைப்பிடிப்பதன் மூலம் நஞ்சற்ற, ஆரோக் கியமான, உட்கொள்ளப் பொருத் தமான உணவு வகைகளை உற்பத்தி செய்யமுடியும்.

### பசுமைப் புரட்சியின் விளைவுகள்

கடந்த கால வரலாற்றை நோக்கினால், ''பசுமைப்புரட்சி''யின் விளைவாக உயர் விளைவு தரும் பயிர் வர்க்கங்கள் விவசா யத்தில் அறிமுகப்படுத்தப்பட்டன. அத்து டன், தனிப்பயிர்ச்செய்கைக்கு வழி வகுத் ததுடன் விவசாய இரசாயணங்கள், செயற்கை உரங்கள், விவசாய இயந்திரங்கள் என்ப வற்றின் அதிகரித்த பாவனைக்கும் இட் டுச் சென்றது. பசுமைப்புரட்சியினால் பசு




மையான விளைவுகள் தோற்றுவிக்கப் படவில்லை. மாறாக, சூழலுக்குப் பாதக மான, மண்ணரிப்பு, மண் உவராதல், நீர் மாசடைதல், உயிர்ப்பல்வகைத் தன்மை யின் இழப்பு, பீடைக் கொல்லிகளினதும் நுண்ணுயிர்க் கொல்லிகளினதும் மீதிகள் உணவுடன் சேர்தல் போன்ற விளைவு களே தோற்றுவிக்கப்பட்டன.

யாழ்.மாவட்ட விவசாயச் செய்கையும் இதற்கு விதிவிலக்கல்ல. இங்கும் விவசாய செய்கையில் விவசாய இரசாயனங்களி னதும் செயற்கை உரங்களினதும் மட்டற்ற பாவனையால் நஞ்சூட்டப்பட்ட காய்கறி களை உணவாக உட்கொள்ள வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு யாழ்.மக்கள் தள் ளப்பட்டுள்ளார்கள். இதனால் இருதயநோய், நுரையீரல் அழற்சி, சிறுநீரக அழற்சி மற் றும் கருப்பையில் நோய்கள் என்பன மக்க ளைப் பாதிக்கத் தொடங்கியுள்ளது.

இந்நிலையை மாற்றியமைக்க படிப் படியாக யாழ்.மாவட்டத்தில் சேதனப்பயிர்ச் செய்கையை விரிவாக்கவேண்டிய தேவை தற்போது தோன்றியுள்ளது. மண்ணின் நீண்டகால வளத்தை மேம்படுத்தவும் இயற்கை வளங்களின் மிதமிஞ்சிய பாவ னையைத் தடுத்து சூழலை மாசடையாது பாதுகாப்பதற்கும் மீள் புதுப்பிக்கமுடி யாத சக்தி வளங் களினதும் ஏனைய வளங்களினதும் பாவனையைக் குறைப்பதற்கும் பாதுகாப்பானதும் ஆரோக்கியமானது மான சூழலுக்கு போதியளவு வளங் களை மீளச்சேர்ப்ப தற்கும் போசணை நிறைந்த ஆரோக் கியமான உயர்தர முள்ள உணவுப் பொருள்களைப் போதியளவு உற் பத்தி செய்வதற் கும் இயற்கையான நிலத்தோற்றத்தை யும் விவசாயச் சூழல் தொகுதியை மேம் படுத்திப் பேணுவதற்கும் பாரம்பரிய விவ சாய அறிவுகளை அங்கீகரிப்பதற்கும் சேத னப் பயிர்ச்செய்கையை முன்னெடுத்தல் அவசியமான படிமுறையாகும்.

### விவசாயச் சுற்றுலா

யாழ்.மாவட்ட விவசாயிகளுக்கு சேத னப் பயிர்ச்செய்கை தொடர்பான அறிவை விருத்தி செய்வதற்காக, சாவகச்சேரி, கைதடி, நீர்வேலி, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, கெருடாவில், கரவெட்டி, வல் வெட்டி, தெல்லிப்பழை, பண்டத்தரிப்பு, மாதகல், வட்டுக்கோட்டை, உரும்பிராய், கொக்குவில், உடுவில், இணுவில் ஆகிய பிரதேசங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப் பட்ட 20 விவசாயிகளையும் 10 விவசா யத் திணைக்கள உத்தியோகத்தர்களை யும் கொண்ட குழுவானது கடந்த மார்ச் மாதம் ஒரு வாரம் தென்னிலங்கைக்கான சுற்றுப்பயணத்தை மேற்கொண்டது. முதல் மூன்று நாள்களும் பேராதனை, கல காவில் அமைந்துள்ள ''ஹெமி சேவா செவன'' நிலையத்தில் சேதனப் பயிர்ச் செய்கை தொடர்பான விரிவுரைகள் பல் வேறு விரிவுரையாளர்களால் நடத்தப் பட்டது. இதன் பின்னர் அந்நிலையத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள சேதனப் பயிர்ச் செய்கைத் தோட்டங்கள் பார்வையிடப் பட்டன. அங்கு கூடை முறையில் கூட் டெரு, தொட்டி வடிவில் மண்புழுக் கூட் டெரு, மண்புழுத் திரவம் தயாரிக்கப்படு வதை குழுவினர் பார்வை யிட்டனர்.

### கூடை முறையில் கூட்டெரு தயாரிப்பு

செவ்வக வடிவில் கூடையை அமைப்பதா யின் 10'x4'x5' அல்லது வட்டவடிவம் எனில் 4' விட்டமும் 5' உயரமும் கொண்ட கூடையை தடி கள், கயிறு ஆகியவற் றைக் கொண்டு அமைக் கப்பட்டுள்ளது. சேத னக் கழிவுகள் தொடர்ச் சியாக கூடையினுள் சேர்க்கப்படுகின்றது. காய்ந்திருந்தால் மட்டும் நீர் தெளிக்கப்படுகின் றது. தடிகள் காய்ந்திருப் பின் அவற்றை அகற்றி புதிய தடிகள் நடப்படு



மண் பு'ழுத் திரவத் தயாரிப்பின்போது

கின்றன. கழிவுகள் உக்கல் அடைந்த பின் னர் தேவைக்கேற்ப தடிகளை உயர்த்தி கீழ்ப் பகுதியில் பசளையை எடுத்துக் கொள்ளலாம். சிறந்த முறையில் தடிகளை நட்டு பராமரித்தால் சுமார் 1 - 1½ வரு டங்களுக்கு கூடையை கூட்டெரு தயா ரிப்பிற்காகப் பயன்படுத்தமுடியும். 1½ மாத காலப்பகுதியில் கூட்டெருவைப் பெற்றுக்கொள்ளமுடியும்.

கூட்டெரு தயாரிப்பில் போதிய காற் றோட்டம், போதிய ஈரலிப்பு என்பன முக்கியமாக பேணப்பட வேண்டிய கார ணிகள் ஆகும்.

### மண்புழுத் திரவம் தயாரித்தல்

எமது சூழலில் காணப்படுகின்ற மண் புழுக்களை முறையாக தயாரிக்கப்பட்ட பரலில் வளர்ந்து அவைகள் வெளியாக் கும் கழிவே மண்புழுத் திரவம் ஆகும். மண்புழுத்திரவம் ஆனது கூடியளவு நுண் போசணை மூலகங்களைக் கொண்டுள் ளது. இத்திரவத்தின் 1 பங்கிற்கு 5 பங்கு நீர் சேர்த்து, அக் கலவையை பயிர்களின் வளர்ச்சிப் பருவத்தில் மாலை நேரங்க ளில் தெளிக்கும் முறை காணப்படுகின்றது. இம்முறை அதிக செலவாகாது. தொடர்ச் சியாக உற்பத்தியுண்டு. ஒரு வருடம் வரை இவ்வமைப்பை பயன்படுத்த முடியும்.

### மண்புழுக் கூட்டெரு தயாரிப்பு

மண்புழுக் கூட்டெருத் தயாரிப்பானது 4'x4'x3' பரிமாணங்களைக் கொண்ட நான்கு தொட்டிக ளாகும். ஒவ்வொரு தொட்டிகளுக்கு மிடையில் இடைத் தொடர்புகள் உண்டு. முதலாம் தொட்டியில் குப்பை கழிவு களை இட்டு, 1½ மாதங்களின் பின் னர் அதனுள் மண் புழுவையிட வேண் டும். ஒவ்வொரு மண் புழுவும் ஒரு மாதத்தில் 10 குட் டிகளை உருவாக் கும். முதலாம் தொட்டி நிரம்பிய வு டன் ஒழுங்கு முறைப்படி 2ஆம், 3ஆம், 4ஆம் தொட்டிகள் நிரப்பப்படும். இம்முறை யில் சேதனக்கழிவுகளை படைபடையாக இடத் தேவையில்லை. அத்துடன் புரட்டு தலும் அவசியமில்லை. இம்முறையானது விவசாயிகளைப் பெரிதும் கவர்ந்தது.



சேத னப் பயிர்ச்செய்கைத் தோட்டம் ஒன்று

இவற்றைவிட பசிய சாணம், கிளி சிறியா இலைகள் என்பவற்றில் இருந்து திரவப்பசளை தயாரித்து பயிர்களுக்கு மாலை வேளைகளில் விசிறப்படுகின் றது. வேலிகளில் அகத்தி, ஆடாதோடை, பாவட்டை, இப்பில் இப்பில், கிளிசிறியா போன்ற மரங்கள் நடப்பட்டு அங்கு மரங் களின் பல்வகைத்தன்மை பேணப்பட்டு வருகின்றது.

அத்துடன் செய்கை பண்ணப்பட்டுள்ள பயிர்களும் தனிப்பயிராகச் செய்கை பண் ணப்படாது, கரட், பீற்றூட், தக்காளி, வெங் காயம், கோவா வகைகள் எனப் பயிரிடப் பட்டு பயிர் பல்வகைத் தன்மை பேணப் பட்டுக்காணப்பட்டது. இதன் மூலம் பயிர் களில் ஏற்படக்கூடிய நோய்பீடைத் தாக் கங்களை இலகுவில் கட்டுப்படுத்தப்படு கின்றது. அத்துடன் ஏதாவது ஒரு பயிரில் எதிர்பாராத விதமாக இழப்பு ஏற்படும் பட் சத்தில், அவ்விழப்பு ஏனைய பயிர்களின் மூலம் ஈடுசெய்யப்படுகின்றது.

### பல்லினப் பயிர்ச்செய்கை முறை

பூச்சி விரட்டி பயிர்களாக செவ்வந்தி, சூரியகாந்தி, காட்டுச்சூரியகாந்திப் பயிர் கள் பயிரிடப்பட்டு காணப்பட்டன. இவற றின் பூக்களின் மணம் மூலம் பூச்சிகள் விரட்டப்படுகின்றன.

இறுதி மூன்று நாள்களும் அனுராத புரம், குருணாகல் மாவட்டங்களில் வர்த் தக ரீதியில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள மரக் கறிப்பயிர்களுக்கான சேதனப் பயிர்ச்செய் கைத் தோட்டங்களைக் குழுவினர் பார்வை யிட்டனர். இதில் நாகொல்லாகம என்ற பிரதேசத்தில் 2 ஏக்கர் விஸ்தீரணத்தில் சேதனப் பயிர்ச்செய்கையை மேற்கொள் ளும் டபிள்யு.ஜிகுணரட்ணபண்டா கருத் துத் தெரிவிக்கும்போது, தனது உற்பத்தி களுக்கு அதிக கிராக்கி இருப்பதாகவும் மாதம் 15 ஆயிரம் ரூபா தேறிய வருமான மாக கிடைப்பதாக தெரிவித்தார். இத் தோட்டம் உலர்வலயத்தில் அமைந்திருந் தாலும் கூட அதன் தோற்றமானது ஈரவல யத்தில் உள்ள தோட்டம் போல பசுமை யாக காணப்படுவதாக குழுவில் உள்ள விவசாயி ச.தங்கராசா தெரிவித்தார்.

இறுதி நாள், மாஹோ பிரதேசத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள 04 சேதனப்பயிர்ச் செய்கைத் தோட்டங்கள் குழுவினரால் பார்வையிடப்பட்டன. முதலாவது தோட்ட மானது 02 ஏக்கர் விஸ்தீரணத்தில் ஸ்தா பிக்கப்பட்டு, 40 வகையான பயிர்வகை கள் செய்கை பண்ணப்பட்டுக் காணப் பட்டது. இங்கு வல்லாரை அறுவடை செய்யப்பட்ட பின்னர், கிளிசிறியா இலை களினால் பத்திரக்கலவை இடப்படுகின் றது. சூரியசக்தி மூலம் இயங்கும் நீர்ப்பம்பி மூலம் பயிர்களுக்கு நீர்ப்பாசனம் மேற் கொள்ளப்படுகின்றது.

வி.இளங்குமார்
விவசாயக் கண்காணிப்பு உத்தியோகத்தர்
பிரதி விவசாயப் பணிப்பாளர் அலுவலகம்
(விரிவாக்கம்), யாழ்ப்பாணம்.

இரண்டாவது தோட்டமானது, ஒரு ஏக்கர் விஸ்தீரணத்தில் வல்லாரைப்பயிர் செய்கை பண்ணப்பட்டுள்ளது. மாதமொரு முறை அறுவடை செய்யப்பட்டு, ஏற்று மதிக்காகக் கொழும்பிற்கு அனுப்பப்படு கின்றது.

மூன்றாவது தோட்டமானது, 02 ஏக்கர் விஸ்தீரணத்தில் வல்லாரை, மரமுந்திரி கையும் நான்காவது தோட்டத்தில் 10 ஏக் கர் விஸ்தீரணத்தில், மிளகாய், வெங்கா யம் உள்ளடங்கலாக 40இற்கு மேற்பட்ட பயிர்வகைகளும் செய்கை பண்ணப்பட் டுள்ளன.

இத்தோட்டங்களின் மண் மாதிரியும் உற்பத்திப் பொருள்களும் லங்கா சேதன நிறுவனத்தினரால், பரிசோதனை செய் யப்பட்டு சேதன முறையிலே மரக்கறிகள் உற்பத்தி செய்யப்பட்டதென்று உறுதிப் படுத்தப்பட்ட பின்னரே, சந்தைப்படுத் தப்படுகின்றது.

இவ்வாறு வர்த்தகரீதியில் ஸ்தாபிக்கப் பட்டுள்ள சேதனப் பயிர்ச்செய்கை தோட்டங்களை நேரிலே அவதானித்தன் மூலம் சேதனப் பயிர்ச்செய்கை முறை யிலே நம்பிக்கை ஏற்பட்டு தாமும் குறைந் தது ¼ ஏக்கர் விஸ்தீரணத்தில் ஒவ் வொரு விவசாயியும் சேதனப்பயிர்ச் செய்கைத் தோட்டத்தை ஸ்தாபிப்போம் என்ற மன உறுதியுடன் குழுவினர் யாழ்ப்பாணம் திரும்பி, சேதனப் பயிர்ச்செய்கையை ஸ்தாபிக்கும் நடவடிக்கைகளில் தீவி மாக செயற்பட ஆரம்பித்துள்ளார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இறைச்சிக்கோழி விற்பனை**

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம்செய்து குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

**நல்லூர் பாம் சென்ரர்,**
19, முருகேசர் லேன், நல்லூர். (75296)

**கேள்திறன் கருவி (காதுக் கருவி) விற்பனைக்குண்டு**

தொடர்பு: இ.பாலசுப்பிரமணியம்
வேலணை கிழக்கு, வேலணை - 1.
தொ.பே.இல.: 0212223161, 3154 (75298)

**கார் விற்பனை**

13 SRI தொடரிலக்கமுடைய Mitsubisi Lancer கார் விற்பனைக்குண்டு.

தொடர்பு: 0777 173920, 060221 6104. (75306)


# கடற்றொழிலாளர் நிவாரணத்தை அதிகரிக்க அமைச்சர் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூன் 14

குடாநாட்டில் அடிக்கடி கடற்றொழில் பாதிக்கப்பட்டு வருவதால் கடற்றொழிலாளர்களின் நலன்கருதி அவர்களுக்கான நிவாரணத்தை அதிகரிப்பது தொடர்பில் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை எடுத்து வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பாஷையூர், குருநகர் மற்றும் கொழும்புத் துறை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த கடற்றொழிலாளர்களின் சங்கப் பிரதிநிதிகள் அமைச்சரை அவரது யாழ். அலுவலகத்தில் வைத்துச் சந்தித்துக் கலந்துரையாடிய தையடுத்தே அமைச்சர் இந்நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

தங்களுக்கு சமுர்த்தி நிவாரணமே வழங்கப்பட்டு வருவதாகவும் இது தங்களுக்கு எவ்வகையிலும்போதியதாக இல்லை என்றும் பாதிக்கப் பட்டவர் கள் தெரிவித் தனர்.

இதனையடுத்து உடனடியாக மீள் குடியேற்ற மற்றும் அனர்த்த நிவாரண சேவைகள் அமைச் சருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இவர்களுக்கான தற்போதைய நிவாரண முறைமையை இரத்துச் செய்து ஏற்றத் தாழ்வுகளற்ற வகையில் கூடுதல் நிவார ணம் கிடைப்பதற்கும் அதனை இரட்டிப்பாக்கு வதற்கும் அமைச்சரவைப் பத்திரமொன் றைச் சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளார்.

இதன் பிரகாரம் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சும் மீள் குடியேற்ற மற்றும் அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சும் இணைந்து மேற்படி அமைச் சரவைப் பத்திரத்தைச் சமர்ப்பிக்கவுள்ளன. (1)

## முகாமைத்துவ உதவியாளர் பதவி; மேலும் 28பேருக்கு நியமனம்

நாவற்குழி, ஜூன் 14

வடக்கு மாகாண சபையில் மேலும் 28 பேருக்கு முகாமைத்துவ உதவியாளர் பதவிக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இவர்களை எதிர்வரும் 23ஆம் திகதி திருகோணமலை வடக்கு மாகாணசபை அலுவலகத்தில் கடமைக்கு சமுகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

நியமனம் வழங்கப்பட்டுள்ளவர்களின் விவரம் வருமாறு:-

ஜனார்த்தனி தெய்வேந்திரம், அருணகிரி வினோராஜ், சிதம்பரநாதன் ரங்கதாஸ், முருகேசு சுதர்சினி, ஜெவானியஸ் ஜெயன மத்தியூஸ், திருஞானசுந்தரம் ஞானப்பிரியா, செல்வகாந் ஞானசேகரன், சரிதா தியாகன், நாமகள் பிரதீபன், சுஜீவன் தெய்வேந்திரன்.

சிவலோகநாதன் சுரேந்திரன், தேவசீலன் ரஜீவ், துரைராசா சுஜிதா, நடராஜா சிவசங்கர், கிருபைராஜா சரா டிவைனா டிலோஜனா, ராமச்சந்திரன் தயானி, சுபோதினி நாராயணசாமி, பரிபூரணன் குணசிங்கம், தங்கராஜ கலாநிதி, நாகேந்திரன் கிரோஷிகா.

உமாகல்யாணி கந்தசெல்வன், ஜெயரடணசிங்கம் விஜிதா, அருந்தவம் நர்மதா, சந்திரசேகரம் சாருமதி, தனபாலசிங்கம் ராஜேஷ்குமார், கனகசபாபதி கீதாஞ்சலி, நவரட்ணம் சிவதாரணி, சபினா நைட்டிங் கேல் ஜரோம் அன்ரனிதாஸ். (பு-288)

### கூட்டம்

வடமராட்சி, ஜூன் 14

பருத்தித்துறை வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30மணிக்கு அதிபர் திருமதி சீதா சண்முகநாதன் தலைமையில் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (1-236)

### விளையாட்டு நிகழ்வுகள்

ஊர்காவற்றுறை, ஜூன் 14

தீவகம் வடக்கு உதவி அரச அதிபர் பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையிலான பெரு விளையாட்டுக்கள் இன்று ஆரம்பமாகின்றன.

துடுப்பாட்டம் இன்றும் கரப்பந்தாட்டம் நாளையும் இடம்பெறவுள்ளன.

இப்போட்டிகளில் இருதயராசா வி.க., ஐயனார் வி.க., அண்ணா முன்னேற்ற வி.க., லக்கிஸ்ரார் வி.க., சென். ஜேம்ஸ் வி.க., சின்னமடு வி.க., ஞானருளி வி.க., மகாமாரி வி.க., ஜெற்லைனஸ் வி.க., அருணோதயா வி.க., காந்திஜி வி.க., அண்ணா வி.க., பத்திமா வி.க. உட்பட 13 விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றவுள்ளன. (1-127)

* * *

வலி.வடக்கு ஜூன் 14

அமரர் சந்திரகுமாரின் 12ஆவது ஆண்டு நினைவையொட்டி அராலி திருமகள் விளையாட்டுக்கழகம் வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் நடத்தும் 7 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு திருமகள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களில் கலந்து கொள்ளவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:

* மூளாய் வளர்மதி வி.க. எதிர் கலைநகர் வி.க.

* அராலி [illegible] வி.க. எதிர் இளவாலை [illegible] வி.க. (1-86)


**திருமண வாழ்த்துகள்**



இன்று திருமண பந்தத்தில் இணையும் மாரியப்புலம், தாவடி வடக்கு, கொக்குவிலைச் சேர்ந்த விஜிந்தன் கற்பகப்பிள்ளையார் கோயிலடி, உடுவில் கிழக்கு, சுன்னாகத்தைச் சேர்ந்த அருள்சோதி தம்பதியினரை பல்லாண்டு காலம் சீரும் சிறப்புடனும் இனிதே வாழ மனதார வாழ்த்துகின்றோம்.

லீலாவதி குடும்பம்,
கற்பகப்பிள்ளையார் கோயிலடி, உடுவில் கிழக்கு, சுன்னாகம். 0773904289. (75303)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



**திரு. பொன்னம்பலம் சூரசங்காரன்**

மல்லாகம் நீதி, நிர்வாக மாவட்டத்துக்கான ஒரு சமாதான நீதவானாக நீதியமைச்சரால் நியமிக்கப்பட்டு மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தில் நீதிபதி முன்னிலையில் 13.06.2008இல் சமாதான நீதவனாக சத்தியப்பிரமாணம் செய்து பதவி பெறுகின்றார்.

சங்கானை - 250 மத்தியஸ்தர்கள் குழுவின் பிரதம மத்தியஸ்தராக அப்பிரதேச மக்களுக்கு அவர் சேவையாற்றி வருகின்றார். அத்துடன் சிறப்பான, நேர்மைமிக்க சமூக சேவைகள் மூலம் கிராம மக்கள் மத்தியில் நன்மதிப்புப் பெற்றவர். இவரது சேவை சமாதான நீதவான் பணியிலும் மென்மேலும் சிறந்து விளங்க பணிப்புலம் கிராம அபிவிருத்திச் சங்கம் பாராட்டி வாழ்த்துகின்றது. (75297)

வாழ்த்துவோர்:
கிராம அபிவிருத்திச் சங்கம், பணிப்புலம் (J/176).

**மானிப்பாய் ப.நோ.கூ.சங்கம் வெற்றுப் பொருள் கூறுவிலை**

எமது சங்கத்தில் வெற்று பை, சாக்கு, 04 லீற்றர் வெற்று ரின் என்பன விற்பனைக்குண்டு. தேவையானோர் 20.06.2008 ற்கு முன்னர் கூறுவிலையை சங்க காரியாலயத்தில் ஒப்படைக்கவும்.

(சி/553319) **பொதுமுகாமையாளர்.**

**ஏழாம் ஆண்டு நினைவலைகள்**



திருமதி
சிவகாமி சின்னத்தம்பி
(Rtd. Head teacher, J/VadaHindu Girls' College)

அன்புடன் நினைவு கூரும்:
**குடும்பத்தினர்.**
கரவெட்டி மேற்கு,
கரவெட்டி.

**கண்ணீர் அஞ்சலி**



நோர்வேயில் சிவபதமடைந்த எமது குடும்ப நண்பன்
**தாமோதரம்பிள்ளை குமார் (மாஸ்டர்)**
அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்திற்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

145/1, பாங்சல வீதி,
யாழ்ப்பாணம்.
லிங்கன் குடும்பத்தினர். (75308)

**31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்**



தோற்றம்: 10.08.1933

மறைவு: 16.05.2008

**திருமதி யோகம்மா அருளப்பு**
(ஓய்வு பெற்ற ஆசிரியை, யா/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை)

கண்ணை இமை காப்பது போல் எமைக்காத்து வளர்த்தீர்கள் அம்மா! கணப்பொழுதில் எமை மறந்து பறந்த தெங்கே அம்மா? கண்ணீரில் நாம் மிதந்து கரைகின்றோம் அம்மா! கருணைகொண்டு மீண்டும் எம்குடியில் பிறந்து வா அம்மா! எங்கள் குலவிளக்கே! உங்கள் ஆத்மா இறைவனடி சேர வேண்டுகின்றோம்.

அமரரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (15.06.2008) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணத்தில் தாங்களும் கலந்து ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும்அன்புடன் அழைக்கின்றோம்.

எமது மணிவிளக்கு அணைந்த வேளையில் எம் துயரில் பங்கு கொண்ட அயலவர், உறவினர், நண்பர்களுக்கும் தந்தி, தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தோருக்கும், கிரியைகளில் கலந்துகொண்டோருக்கும், எவ்வித தடங்கலுமின்றி கொழும்பிலிருந்து யாழ்வர பிரயாண வசதியை உரிய தருணத்தில் தந்து உதவிய எக்ஸ்போ எயார் நிறுவன யாழ்.மாவட்ட முகாமையாளருக்கும், கால நேரமறிந்து பல வழிகளிலும் எம் துயர் தீர்த்த அன்பு உள்ளங்களுக்கும் எம் இதயம் கனிந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

91/14 A, இந்து மகளிர் வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம். (75310) குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிறுவர் உழைப்புக்கு எதிரான மாவட்ட மட்ட நிகழ்வை முன்னிட்டு நேற்றுக்காலை சிறுவர்களுக்கு எதிரான செயற்பாடுகளைக் கண்டிக்கும் வகையிலான விழிப்புணர்வு ஊர்வலம் ஒன்று நடத்தப்பட்டது.
இதில் குடாநாட்டில் உள்ள பல்வேறு தொண்டு நிறுவனங்களினதும் ஊர்திகள் கலந்துகொண்டன.
ஊர்வலம் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்களில் சிலவற்றைக் காணலாம். (படங்கள்: லக்ஸ்மன்)

# சிறுவர் உழைப்புக்கு எதிரான மாவட்ட மட்ட ஊர்திப் பவனி

யாழ்ப்பாணம்,ஜூன்14

சிறுவர் உழைப்புக்கு எதிரான மாவட்ட மட்ட ஊர்திப் பவனியும் அரங்க நிகழ்வுகளும் நேற்று இடம்பெற்றன.

பிரதேச செயலர் பிரிவு ரீதியாக நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊர்திப் பவனிக்காக நேற்றுக்காலை 9 மணியளவில் நல்லூர் கந்தசுவாமி ஆலய முன்றிலுக்கு வாகனங்கள் வந்து சேர்ந்தன.

இவை நல்லூரில் இருந்து அரசடி வீதி - கஸ்தூரியார் வீதி - ஸ்ரான்லி வீதி ஊடாக கே.கே.எஸ். வீதியை அடைந்து அங்கிருந்து வீரசிங்கம் மண்டபத்தைச் சென்றடைந்தன.

ஒருசில ஊர்திகள் யாழ்.நகரப் பகுதியை வட்டமிட்டு பின்னர் அங்கிருந்து வீரசிங்கம் மண்டபத்திற்குச் சென்றன.

இந்த ஊர்திப் பவனியில் குடாநாட்டில் உள்ள பல்வேறு தொண்டு நிறுவனங்களின் ஊர்திகள் கலந்துகொண்டன.

நாம் தொழிலாளர் அல்லர்; சிறுவர், எமக்குக் கல்வி வேண்டும், நல்வழி காட்டுங்கள், சிறுவர்களை மிருகத்தனமாக நடத்தாதே போன்ற பல்வேறு வாசகங்களுடன் ஊர்திகள் பவனி வந்தன.

சிறுவர்களும் பல்வேறு வேடங்களைத் தாங்கியவாறு பவனி வந்ததையும் காணக்கூடியதாக இருந்தது. வீரசிங்கம் மண்டபத்தில் சிறுவர் பாதுகாப்பு நிதிய மாவட்ட முகாமையாளர் விக்ரர் மோசேஸ் தலைமையில் அரங்க நிகழ்வுகள் இடம்பெற்றன. (203-111-302)

## இலங்கை வங்கியின் பருத்தித்துறைக் கிளையின் பொன்விழா நிகழ்வுகள்

வடமராட்சி,ஜூன்14

இலங்கை வங்கியின் பருத்தித்துறைக் கிளையின் 50ஆவது ஆண்டு நிறைவை ஒட்டிய பொன்விழா நிகழ்வுகள் எதிர்வரும் 29ஆம் திகதி நடைபெறவுள்ளன.

பருத்தித்துறை நகர வர்த்தகர்கள் மற்றும் வாடிக்கையாளர்களின் பங்களிப்புடன் பல்வேறு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (203-236)

# வீதியின் வேலைகள் பாதியில் உள்ளன; பயணம் செல்வோர் பெரும் அவலம்!

நாவற்குழி,ஜூன்14

உலக உணவுத்திட்டத்தின் கீழ் சாவகச்சேரி பிரதேச சபையால் கடந்த வருடம் புனரமைக்கப்பட்ட கைதடி வடக்கு - நீர்வேலி வீதியின் வேலைகள் முற்றாக நிறைவு பெறாது உள்ளது.

இதனால் அந்த வீதியால் பயணம் மேற்கொள்வோர் பெரும் சவால்களையும் சிரமங்களையும் எதிர்கொண்டு வருவதாக விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

கடல்நீர் சூழ்ந்து காணப்படும் இவ்வீதியில் தற்காலிக பாலம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

ஆனால் அந்தப் பாலத்தின் ஊடாக வாகனங்களில் பயணம் செய்யமுடியாத நிலையே காணப்படுகிறது. அதுவும் ஆபத்தான பயணமாகவே உள்ளது.

இந்நிலையில் அண்மையில் பெய்த மழையாலும் வீதியில் உள்ள மண் அரிக்கப்பட்டுவிட்டது.

எனவே, இவ்விடயத்தை உரிய அதிகாரிகள் கவனத்தில் எடுத்து மிகுதி வேலையையும் நிறைவு செய்து தரவேண்டும் என பொதுமக்களால் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. தென்மராட்சி மக்களின் முக்கிய போக்குவரத்து வீதியாக இது உள்ளமையால் இதனை உடன் உரியவர்கள் கவனத்தில் எடுக்கவேண்டும் என்றும் மக்கள் கேட்டுள்ளனர். (203-288)

## குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

## சமூக பாதுகாப்பு ஒய்வூதிய திட்டத்தில் இணைவோர் அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்14

தென்மராட்சி பிரதேசத்தில் சமூக பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டத்தில் இணைவோரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த மே 31ஆம் திகதி வரை 400 இற்கும் மேற்பட்டோர் இத்திட்டத்தில் இணைந்துள்ளதாகவும் வறுமைக்கோட்டின்கீழ் உள்ள குடும்பங்களைச் சேர்ந்தோர் இத் திட்டத்தில் இணைவது குறிப்பிடத்தக்கது. (203-207)

## வெளிமாவட்டங்களுக்கு

# கடிதங்களுடன் சில பொருள்களை இணைத்து அனுப்புவதற்குத் தடை

நவாலி,ஜூன்14

யாழ்.மாவட்ட தபாலகங்களிலிருந்து பிற மாவட்டங்களுக்கு கடிதங்கள் மூலம் சில பொருள்களை அனுப்புவது தற்காலிகமாகத் தடை செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இசையுடன் கூடிய வாழ்த்து மடல்கள், இறுவெட்டுக்கள் மற்றும் இலத்திரனியல் சம்பந்தப்பட்ட பொருள்கள், உலோகப் பொருள்கள் என்பவையே இவ்வாறு தடை விதிக்கப்பட்ட பொருள்களாகும்.

இது தொடர்பான சுற்றறிக்கை ஒன்று யாழ்.பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் அலுவலகத்தினால் சகல தபாலகங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. (202-100)

# மிருசுவில் - விடத்தற்பளை கிராமத்தில் அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுப்பு

யாழ்ப்பாணம்,ஜூன்14

மிருசுவில், விடத்தற்பளை கிராம அபிவிருத்திச் சங்க நிர்வாகிகளின் முயற்சியினால் இவ்வருடம் கிராமத்தில் பல அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கிராமத்துக்கான மின்விநியோகம், முன்பள்ளி அமைத்தல், உசன்- விடத்தற் பளை வீதி புனரமைப்பு, கிராம அபிவிருத் திச் சங்கத்திற்கு கட்டடம் ஆகிய அபிவிருத்தி வேலைகள் தொடர்பாக உரிய அதிகாரிகளுடன் சங்க நிர்வாகிகள் கலந்துரையாடினர்.

இதையடுத்து இவ்வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும், மின்விநியோக வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் கிராமத்துக்கு விரைவில் மின்சாரம் கிடைக்குமெனவும் கிராம அபிவிருத்தி சங்க செயலாளர் து.செல்வராசா தெரிவித்தார். (202-207)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஜூன்14

சரசாலை, இலந்தைத் திடல் வீரமாகாளி அம்பாள் ஆலயப் பெருந்திருவிழா நேற்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து பத்து நாள்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 21ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (203-131)

* * *

யாழ்ப்பாணம்,ஜூன்14

அச்சுவேலி, தோப்பு போதிராம்பிட்டி பிள்ளையார் ஆலயப் பெருந்திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 23ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (203)

* * *

யாழ்ப்பாணம்,ஜூன்14

கல்வயல் பெருங்குளம் அம்பலவாண வீரகத்தி விநாயகர் ஆலயப் பெருந்திருவிழா கடந்த 9ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

எதிர்வரும் 18ஆம் திகதி வரை திருவிழா இடம்பெறும். (202-323)

* * *

வடமராட்சி,ஜூன்14

அல்வாய் வட்டிக்கவளை விறுவர் சுவாமி கோயிலின் வேள்வி விழா 17ஆம் திகதி இரவு ஆரம்பமாகி மறுநாள் நண்பகல் வரை நடைபெறும். (202-236)

* * *

யாழ்ப்பாணம்,ஜூன்14

சாவகச்சேரி நுணாவில் கிழக்கு நாகபூஷணி அம்பாள் ஆலய அலங்காரத் திருவிழா கடந்த 9ஆம் திகதி ஆரம்பமானது. தொடர்ந்து பத்துத் தினங்கள் திருவிழா நடைபெறவுள்ளது. (202-207)

* * *

வடமராட்சி,ஜூன்14

கொற்றாவத்தை, செட்டித்தறை சித்தி விநாயகர் கோயில் வருடாந்தப் பெருந்திருவிழா கடந்த திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

எதிர்வரும் 17ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் புதன்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (203-236)


## மாதாந்த உதவிப்பணம் பெற்றுக்கொள்ளலாம்

நவாலி,ஜூன்14

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பொதுசன மாதாந்த உதவிப்பணம் மற்றும் காசநோய், புற்றுநோய், யானைக்கால் நோய் என்பவற்றிற்கான உதவிப்பணம் பெறுபவர்களினது ஜூன் மாதத்திற்குரிய கொடுப்பனவுகள் உரிய தபாலகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

சம்பந்தப்பட்டவர்கள் இவற்றை உடன் வந்து பெற்றுச் செல்லுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (203-106)

# மத்திய கல்லூரி மாணவனின் சுழல் நீர்ப்பம்பியை அமைச்சர் டக்ளஸ் பார்வையிட்டார்



யாழ்ப்பாணம்,ஜூன்14

யாழ்.மத்திய கல்லூரி மாணவன் த.கடோற்கசனின் புதிய கண்டுபிடிப்பான சுழல் நீர்ப்பம்பியை சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வியாழக்கிழமை பார்வையிட்டார்.

ஆழமான கிணறு மற்றும் ஆழமான இடங்களிலிருந்து எந்தளவு உயரத்திற்கும் நீரினைப் பெறல், குறைந்த சக்தியில் இயங்குதல், வால்வு இல்லாமல் செயற்படல், குறைந்த செலவு மின்சாரத்தினாலும், மின்சாரமின்றியும் இயங்குதல் மற்றும் அதிக நீரினைப் பெறல் போன்ற விசேட அம்சங்களைக் கொண்டுள்ள மேற்படி சுழல் நீர்ப்பம்பியின் மூலம் விவசாயத்தை மேம்படுத்தவும் பொருளாதாரத்தை வளப்படுத்தவும், சூழல் மாசடைவதைத் தவிர்க்கவும், நாட்டின் பசுமையைப் பேணவும், வீண் செலவுகளைக் குறைக்கவும், எரிபொருளை சிக்கனப்படுத்தவும் இயலும் என எதிர்பார்க்கப்படுகின்றது.


இந்த நீர்ப்பம்பி தொடர்பில் அமைச்சரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதையடுத்து இதன் கண்டுபிடிப்பாளரான மாணவன் கடோற்கசனை அழைத்து அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நீர்ப்பம்பியின் செயற்பாடுகளை அவதானித்தார்.

அதனையடுத்து இம்மாணவனின் முயற்சியை ஊக்குவிக்கும் வகையிலும் அதன் மூலமான பயனை குடாநாட்டின் விவசாயத் துறைக்குக் கிடைக்கக்கூடிய நோக்கத்துடனும் தற்போது தயாரிக்கப்பட்டுள்ள நீர்ப்பம்பியை விட சற்று பெரிய நீர்ப்பம்பி ஒன்றைத் தயாரித்து நாளைமறுதினம் நடத்தப்படவுள்ள விவசாயத்துறை சார்ந்த உயர்மாநாட்டில் காட்சிப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதுடன் இதற்கான முதலீட்டையும் அமைச்சர் வழங்கியமை குறிப்பிடத்தக்கதாகும். (1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16ஆம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 19 ★ 12 ★ 1942



மறைவு 11 ★ 06 ★ 1992

## அமரர் மாணிக்கம் தங்கவடிவேல்

(ஓய்வுபெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர் P.W.D.)

திதி: 14.06.2008

அன்புமொழி பேசியெம்மை அரவணைத்த தெய்வமே!
அவனியிலே நின் பிரிவால் ஆறுதலை யாமிழந்தோம்
நல் வழியில் நாம் வாழ வேண்டுமென்ற அப்பாவே!
நானிலத்தே உங்களை யாம் என்றென்றும் மறவோமே.

"தங்கத் தாமரை" அல்வாய். (75292)

பிரிவால் துயருறும்: **குடும்பத்தினர்.**

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்

பிறப்பு: 09.02.1931
இறப்பு: 12.05.2008



அமரர்

## தருமலிங்கம் தருமராசா

*(முன்னாள் உரிமையாளர், ராஜன் புடைவை கைத்தறி நிலையம்)*

கடந்த 12.05.2008 திங்கட்கிழமை சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (14.06.2008) சனிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகைதந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*புதிய செம்மணி வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.* (74885)

தகவல்: ச.பாலகிருஷ்ணன் (மைத்துனன்).

# Chundikuli Girls' College
## Old Girls' Association, Jaffna.

### The Annual General Meeting And Fellowship Lunch

**Date** : Wednesday, 18th June 2008

**Venue** : College Hall

**Agenda**

**9.30 am:** Holy Communion & Worship Service at St.John the Baptist's Church, Chundikuli.

**11.00 a.m:** A.G.M

**12.30 p.m :** Lunch and Games

*Lunch Tickets Rs. 200*

***All Old Girls are cordially invited.***

(c/553175) *Secretary.*

# COMPUTER EXPRESS
**Institute of Information Technology**
#15, Sirambiyadi Lane, Jaffna.021 222 8250
Branch : 167, Kasthuriyar Rd, Jaffna 0777222422

**ஒருவாரகால முழுநேர கற்கைநெறிகள்**

***Diploma in Hardware Engineering***
❖ Assembling ❖ Upgrading ❖ Troubleshooting ❖ Fault finding ❖ Repairing ❖ Servicing ❖ Software Installation ❖ Configuring ❖ Networking
Course Fee : 2000/=

***Diploma in Video Editing***
Video Mixing Software களூடாக
❖ Adobe Photoshop ❖ Adobe Premier ❖ Cool3D Studio ❖ Pinnacle Studio ❖ VCD Cutter ❖ Capturing
Course Fee : 3000/=

***Diploma in Graphic Designing***
❖ Adobe Photoshop ❖ Corel DRAW ❖ Cool3D Studio ❖ Micro Media Flash
Course Fee : 2000/=

***Diploma in Quick Books***
பிரபல கணனிக்கணக்கியல் மென்பொருள்
Course Fee : 2000/=

**வகுப்புக்கள் ஆரம்பம் : 16/06/2008 09.00AM**

# தென்மராட்சிப் பிரதேசத்தில் இருபது குடும்பங்களுக்கு சுய தொழில் உதவி

யாழ்ப்பாணம், ஜூன்14

தென்மராட்சிப் பிரதேசத்தை சேர்ந்த வறுமைக் கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களைச் சேர்ந்த 20 பேருக்கு சுய தொழில் உதவித் தொகை வழங்கப்படவுள்ளது.

மாகாண சமூகசேவைகள் திணைக்களத்தினர் பயனாளிகளுக்கு தலா 15 ஆயிரம் ரூபா வீதம் வழங்கவுள்ளனர்.

உதவித் தொகை பெறுவதற்கு விண்ணப்பித்தவர்கள் பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவுடன் தொடர்பு கொள்ளுமாறு பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் கேட்டுள்ளார். (202-207)

# சந்நிதியான் ஆச்சிரமம் முன்பள்ளிகளுக்கு உதவி

சுழிபுரம், ஜூன்14

வலிகாமம் மேற்கிலுள்ள 50 முன்பள்ளிகளுக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தினர் கற்றல் உபகரணங்களை வழங்கியுள்ளனர்.

சித்தன்கேணியிலுள்ள முன்பள்ளி ஆசிரியர் அலுவலகத்தில் வைத்து ஆச்சிரமத்தினரால் அண்மையில் வைபவ ரீதியாக இந்த உபகரணங்கள் கையளிக்கப்பட்டன. (202-28)

# பாடசாலைப் பற் சிகிச்சையாளர் பதவி வெற்றிடம்

யாழ்ப்பாணம், ஜூன் 14

சுகாதாரப் பராமரிப்பு மற்றும் போசணை அமைச்சு பாடசாலைப் பற்சிகிச்சையாளர் பயிற்சி நெறிக்கு பெண்மாணவர்களை இணைத்துக் கொள்வதற்கு விண்ணப்பங்களை கோரியுள்ளது.

இவை தொடர்பாக அறிவுறுத்தல்கள் 23.05.2008 ஆம் திகதிய அரச வர்த்தமானியில் வெளிவந்துள்ளன.

மேலதிக விவரங்களை யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் பார்வையிடலாம் என பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார். (202)

## விற்பனைக்கு

32, 10, 6, 3 KW ஆகிய டீசல் ஜெனரேற்றர்களும் வேறு பலதரப்பட்ட டீசல் இயந்திரங்களும் விற்பனைக்குண்டு.

**மூர்த்தி,**
**சிவன் வீதி, பரவைக்குளம்,**
**திருநெல்வேலி.** (75272)

## கணினிக் கல்வி

கணினி அறிவினைப் பெறவிரும்பும் எவரும் எந்த வயதினரும் இதில் இணைந்து கொள்ளமுடியும். சிறியவர்கள், பெரியவர்களுக்குத் தனித்தனியான பிரிவு கள்
ஆரம்பம்- Individual/Group Classes
Ms.office, Internet, Hardware, Desktop publishing
பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு.
T.P. 0602216083 **By R.Kumaran - B.Sc.**

# சனசமூக நிலையங்களுக்கு நிதி ஒதுக்கீடு

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு நிதியில் இருந்து இரண்டு சனசமூக நிலையங்களுக்கு ஒரு லட்சத்து 80 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டுள்ளது என்று மாநகர ஆணையாளர் மு.செ.சரவணபவ தெரிவித்துள்ளார்.

அரியாலை சனசமூக நிலைய கட்டட புனரமைப்புக்கென 80 ஆயிரம் ரூபாவும் சரஸ்வதி சனசமூக நிலைய சிறுவர் பூங்கா புனரமைப்புக்கென ஒரு லட்சம் ரூபாவும் இவ்வாறு வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (203-111)

# 33ஆம் நாள் நினைவஞ்சலி



தாயின் மடியில்: 18.05.1962

ஆண்டவன் அடியில்: 13.05.2008

அமரர்

## நடராசா உமாகாந்தன்

எமது அன்புத் தெய்வத்தின் பிரிவுத் துயரத்தில் பங்குகொண்ட அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவிப்பதுடன் இன்று (14.06.2008) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*அம்பலவாணர் வீதி, உடுவில் கிழக்கு, சுன்னாகம்.* (75264)

தகவல்: மனைவி.



# IIS
## Special Online Classes

விசேட Online வகுப்புக்கள் மூலம் மிகக்குறுகிய காலத்தில் Diploma கற்கை நெறிகளை முடித்துக்கொள்ளும் வாய்ப்பினை IIS ஏற்படுத்தி தருகின்றது.

ஆரம்பம் **23-06-2008** (பகல் 10.00மணி)

| Courses | Duration |
|---|---|
| Diploma in Microsoft Office | 2 Months |
| Diploma in Internet Technology | 2 Months |
| Diploma in Desk Top Publishing | 2 Months |

ஓர் பிரிவில் 20 மாணவர்கள் மட்டுமே அனுமதிக்கபடுவர் உங்கள் அனுமதிக்கு முந்திக்கொள்ளுங்கள்

கணனிக் கல்விக்கு தனித்துவம் மிக்க IIS நிறுவனத்தில் இணைவதனூடாக கணனி உலகில் நீங்கள் அங்கீகரிக்கப்படுகின்றீர்கள்.

**INSTITUTE OF INFORMATICS STUDIES**
100,CLOCK TOWER ROAD, JAFFNA.
T.P :- 021 222 2831

# CAD & BS

**DIPLOMA IN COMPUTER AIDED DRAFTING AND BUILDING STUDIES**



கட்டடதொழில் நுட்பவியலாளர்கள், கட்டடத்தொழில் நுட்ப மாணவர்கள், க.பொ.த (உ/த) கற்றோர் கவனத்திற்கு! உங்களுக்காகவே நவீன தொழில்நுட்ப யுக்திகளை உங்கள் துறையில் பிரயோகிக்கதக்க வகையில் வடிவமைக்கப்பட்ட விசேட கற்கைநெறி.

| | |
|---|---|
| Starts on | 21st June 2008 at 10.00 a.m. |
| Duration | 6 months (Part Time) |

Course Objective :
Sufficient background knowledge to those who seek employment as CAD Draftsman or Supervisor/ Technician, and/or want to proceed his/her studies in the field and, an in-depth knowledge to those who are already employed in the field in such categories.

Course Contents :
- Building Technology
- Construction Materials
- Building Services
- Building Drawings
- Quantity Surveying
- Basic Theory of Structures
- Computer Aided Drafting

**IIS CITY CAMPUS**
No. 200, Sivan Pannai Road, Jaffna.
Tel : 021 222 8060

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரத்தம் வழங்குவதனால் உடல் உபாதை எதுவும் ஏற்படுவதில்லை. ஓர் உயிரைக் காப் பாற்ற உதவினோம் என்ற மகிழ்ச்சியில் மன ஆறுதல் அடையமுடியும். ஆரோக்கியமான ஒருவர் வாழ்க்கையில் பல தடவைகளும் இரத்தம் வழங்கலாம். குடாநாட்டில் இன்று நில வும் இக்கட்டான சூழ்நிலையில் வைத்திய சாலையின் இரத்தவங்கி எந்நேரமும் தட் டுப் பாடற்ற நிலையில் இருப்பது அவசியம்.

இருக்கலாம். அந்த வரிசையில் தன்னார் வக் குருதிக் கொடை யாளர்களை பெரிய அளவில் நாங்கள் வைத்திருந்தால் தேவைகளை துரித மாக நிறைவேற்ற முடியும்.

அந்தவகையில் ஒழுங்கான இடை வெளியில் தொடர்ச் சியாக இரத்ததானம் செய்யக்கூடிய வசதி களை உருவாக்கவேண்டும். தொடர்ச்சி யாக இரத்ததானம் செய்யும்போது அது இரத்த வங்கியின் தேவைக்குப் பயனுள்ள தாக அமையும்.

தொடர்ந்து இரத்தம் வழங்குபவர்கள்

டங்கள் ஏற்பட் டதா எனக் கேட்ட போது, எந்தக் கஷ் டமும் இல்லை. இன்று வரை ஆரோக்கியமாக வும் மகிழ்ச்சியா கவும் இருக்கின் றேன். உயிர்காக் கும் பணி பாதிக் கப்பட்டவர்களுக்கு உதவுகிறேன் என்ற திருப்தி. புதிய இரத்தம் உரு வாகிறது. இது ஒரு உன்னதமான சேவை என்பதால் எனது நண்பர்கள் சில ரைக் கூட இதில் ஆர்வமுடன் ஈடுபடச் செய்துள்ளேன் என்றார்.



றது. குருதிக் கொடைக்காக என்னையும் பதக்கம் வழங்கிக் கௌரவித்ததில் மகிழ்ச் சியாக இருக்கின்றது.தேக ஆரோக்கியம்

இன்றைய சூழலில் எமது மக்கள் வீணான மரணத்துக்கு உள்ளாகவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகின்றது. எமது பிரதேசத் தில் போதிய அளவு குருதி எமது போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கியில் இல் லாமையே இத்தற்கு முக்கிய காரணமாகும்.

# இரத்தம் வழங்குவது ஓர் உயிரைக் காப்பாற்றும் உன்னத சேவையாகும்

மருத்துவத்துறையில் புதிய வளர்ச்சிகள் ஏற்பட்டபோதும் குருதிக்கு மாற்றீடாக எது வும் கண்டுபிடிக்கப்படவில்லை. எனவே, குருதிக்கு மாற்றீடு குருதி மட்டுமே. இலங் கையில் உள்ள ஐந்து பிராந்திய இரத்த நிலையங்களில் யாழ்ப்பாணம் ஒன்று. எனி னும், இங்கு போதிய அளவு குருதி சேமிப் பில் இல்லாமை உயிர்காப்புக்கு ஒரு சவா லாகவே உள்ளது.

## 20 தடவைகளுக்குமேல் குருதி வழங்கியுள்ள கொடையாளர்கள் என்ன சொல்லுகிறார்கள்?

எங்களுக்கு இரத்தத்தின் தேவை அதி கம் எனக்கூறும் யாழ்.போதனா வைத்திய சாலையின் இரத்த வங்கி வைத்திய நிபு ணர் டாக்டர் சிவசங்கர் இதுபற்றிக் கூறும் போது:



இரத்தத்தின் அதிகளவு தேவை குறித்த உணர்வு பொதுமக்களுக்கு ஏற்படுத்தப்பட வில்லை. அதனால் குருதிக்கொடை குறித்து மக்கள் பெரிதும் சிந்திப்ப தில்லை. இதுதொடர் பான விழிப்புணர்வு ஏற்படுத்தப்படவேண் டும் என்றார்.

கடந்த புதன்கிழமை நடைபெற்ற செய் தியாளர் மாநாட்டில் டாக்டர் சிவசங்கர் இக் கருத்துக்களை வெளியிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

போராட்டம், சுனாமி போன்ற அனர்த் தங்கள், பிரசவம் உட்பட பல்வேறு நிகழ் வுகளால் பெருமளவு இறப்புக்கள் ஏற்படு கின்றன. போதிய அளவு குருதி கையிருப் பிலிருந்தால் அவலச் சாவுகளில் இருந்து உயிர்களைக் காப்பாற்றமுடியும். குருதிக் கொடை என்பது மக்களுக்கு பிரச்சினை களையும் தாக்கங்களையும் ஏற்படுத்தும் ஒன்றல்ல. ஆரோக்கியமான வாழ்வுக்கு வழி காட்டும் ஒன்று அது என்றார்.

அவர் மேலும் கூறியதாவது, பாதுகாப் பான குருதியென்பது இரத்தம் தொற்றுக் கிருமிகளற்றவர்களிடம் இருந்து பெறப் படுவதாகும். நோயில்லாத இரத்தம் என் பது நம்பிக்கையானவர்களிடமிருந்து பெறப்படுவதாகும். தாங்களாகவே விரும் பிக்கொடுப்பவர்கள் தங்களது நோய்கள் பற்றிக் கூறுவார்கள். பணத்திற்காக அல் லது உறவினர்களின் வற்புறுத்தல் காரண மாக இரத்தம் வழங்குபவர்கள் தமது நோய் களை மறைத்துக்கொண்டு தருவார்கள் என்பது உலக ரீதியாக உறுதிப்படுத்தப் பட்டுள்ளது.

விபத்துக்கள், பிரசவம் போன்றவற்றுக் கும் ஒரு நோயாளருக்கு குறிப்பிட்ட வகை இரத்தம் பத்துமுதல் பதினைந்து வரை யானவர்களிடமிருந்து பெறப்படவேண்டி யிருக்கும். சொந்தக்காரர்களே நம்பியிருந் தால் இந்த இலக்கை அடைய முடியாமல்

தங்களின் பிறந்ததினம் அல்லது வேறு விசேட தினத்தை முன்னிட்டு அந்த நாட் களில் வழங்கலாம். பாடசாலைகள், பொது ஸ்தாபனங்கள் தமது ஆண்டுவிழா அல் லது தமது ஸ்தாபனத்தின் ஊடாக நடத்தப் படும் சிரமதானம் ஏனைய நிகழ்வுகள் குறித்த வேளையில் இரத்ததானம் செய் வதை ஒரு இலக்காகக் கொள்ளலாம்.

### நான்கு மாதத்திற்கு ஒரு தடவை வழங்கலாம்

நான்கு மாதத்திற்கு ஒரு தடவை ஒரு வர் இரத்ததானம் செய்யலாம். மயக்கம், தலைச்சுற்று என்பன ஏற்படலாம் என்ற பீதி அவசியமற்றது. முன்னதாக மயக்க மருந்து கொடுப்பார்கள் என நினைப்பதும் தவறு. கட்டிலில் படுத்துக் கிடந்து கதைப் பதுபோல் மிகவும் சுலபமானது. ஐந்து அல் லது பத்து நிமிடங்களில் இரத்தத்தை கொடுத்துவிடலாம். அதற்காக விசேட உணவுகள் எதுவும் உட்கொள்ளவேண் டும் என்பதும் தவறான கருத்தாகும். நீரா காரம் மட்டுமே சிறிது கூடுதலாக உட் கொண்டால் போதுமானது. இரத்தம் கொடுத் தவர் தனது அன்றாட கடமைகளையும்

**இன்று சர்வதேச குருதிக் கொடையாளர் தினம்**

எவ்வித மனப்பீதியுமின்றிச் செய்யலாம். தொழிலுக்கு விடுமுறை பெற வேண்டிய தேவை இல்லை.

இரத்ததானம் உடலுக்கு புதிய தெம்பை அளிக்கின்றது என்பதை பல தடவைகள் தொடர்ச்சியாக வழங்கும் குருதிக் கொடை யாளர்களின் கூற்றுகளில் இருந்து உணர முடியும் என்று குறிப்பிட்டார்.

### 23 தடவைகள் இரத்ததானம்

இலங்கை வங்கி யாழ்.மேற்தரக் கிளை யில் நிறைவேற்று உத்தியோகத்தராக பணி யாற்றும் து.கோணேசநாதன் (வயது55)



சித்தங்கேணியைச் சேர்ந்த இவர் தனது சக உத்தியோகத் தரின் சகோதரிக்கு இரத்தம் தேவைப் பட்டபோது அதற் காக அவர்பட்ட கஷ் டத்தைப் பார்த்து முதன்முதலில் தான் இரத்தம் கொடுத்த தாகவும் 1993 முதல் தடவையாக இரத்த தானம் செய்தபின்னர் நாட்டுச் சூழல் கார ணமாக அதைத் தொடரமுடியாத நிலை யில் மீண்டும் 1996 இல் இரத்ததானம் செய்யத் தொடங்கியதாகவும் இது வரை 23 தடவைகள் இரத்தம் வழங்கியுள்ளதா கவும் தெரிவித்தார்.

இதனால் உங்களுக்கு ஏதேனும் கஷ்

### கல்விக்கு எதுவித பாதிப்புமில்லை

நவாலியைச் சேர்ந்த பிரியந்தினி



(வயது 22) யாழ். பல்கலைக்கழக வணிகத்துறை 3 ஆம்வருடமாணவி இரத்தம் வழங்கிய தால் தனது கல் விக்குஎந்தஇடையூ றும்ஏற்படவில்லை என்றார்.

தனது சகோத ரர்கள் இருவரும் இரத்தம் வழங்கிவரு வதாகவும் ஒருவர் வைத்தியர். அடுத்தவர் கணக்காளர் எனவும் அவர் களைப் பார்த்து தானும் இரத்ததானம் செய்யவேண்டும் என விரும்பினார் என்றும் கூறினார்.


எங்கள் குடும்பமே குருதிக் கொடையா ளர்கள்தான். அதற்கான கௌரவிப்புக்கள், பதக்கங்கள் கூட வழங்கப்பட்டுள்ளன எனக் குறிப்பிட்டார்.

## ஆரோக்கியமாக உள்ள ஒருவர் 4 மாதங்களுக்கு ஒரு தடவை இரத்தம் வழங்கலாம்

19 வயதில் இரத்ததானம் செய்ய ஆரம் பித்த தனது 22ஆவது வயது வரை 13 தடவை இரத்தம் வழங்கியுள்ளார். இதன் மூலம் தனது எடையை கட்டுப்பாட்டில் வைத்திருப்பதுடன் ஆரோக்கியமாக இருக் கவும் முடிகின்றது. உயிர் காக்கும் இந்தப் பணிக்கு ஒவ்வொருவரும் தமது பங்க ளிப்பை வழங்கவேண்டும் எனக் கூறு கின்றார் அவர்.

### உயிர் காக்கும் பணி பெருமையாகவுள்ளது

குருநகரைச் சேர்ந்த குடும்பப்பெண் நிக் கலஸ் மேரி பட்டிஸ் (வயது 45) 2002ஆம் ஆண்டில் இருந்து இதுவரை 12 தட வைகள் இரத்ததா னம் செய்துள்ளார். இரத்தம் தேவை எனப் பத்திரிகை களில் வெளியான செய்திகளைப் பார்த்து சுகதேகி யான நான் இதற்கு உதவினால் என்ன என்ற எண்ணம் மன தில் தோன்றியது என்றும் இந்த நல்ல பணி யைச் செய்யும் ஆர்வம் ஏற்பட்டது என்று கூறினார். தனது சகோதரி 21 தடவைகள் இரத்தம் வழங்கியுள்ளதாகவும் தனது மக னின் 17ஆவது பிறந்தநாள் வருவதை யொட்டி அன்றைய தினம் அவரும் இரத்த தானம் செய்யவிருப்பதாகவும் கூறினார்.



நீங்கள் இரத்தம் செய்ய உங்கள் கண வர் அனுமதித்தாரா எனக் கேட்டபோது, ஆம் எனக்கூறிய திருமதி நிக்கலஸ், இத னால் எனக்கு எந்தவொரு பாதிப்பும் இல்லை. உயிர் காக்கும் பணிக்கு பங்களிப்புச் செய் வது எனக்கு பெருமையாக இருக்கின்

உள்ள அனைவருமே இந்தப் பணியில் ஈடுபடவேண்டும் என்றார்.

### 25 தடவைகள் இரத்தம் வழங்கியவர்

இரத்ததானம் செய்வதால் பல உயிர்களை காப்பாற்ற உதவிவிடும் என்ற மகிழ்ச்சி



கிடைப்பதாகக்கூறு கிறார் யாழ்.கந்தர் மடத்தைச் சேர்ந்த து.ரமணன். யாழ். மாவட்டக் குருதிக் கொடைச் சங்கத் தின் தலைவர். நல் லூர் றோட்டறிக் கழகத்தினூடாக நடமாடும் இரத்த தான சேவையை செய்துள்ளதாகவும் மாணவராக இருந்த 19 வயதின்போதே இரத்ததானம் செய்யத்தொடங்கியதாக வும் இதுவரை 25 தடவைகள் இரத்ததா னம் செய்துள்ளதாகவும் கூறினார். பல உயிர்களைக் காக்கும் பணியில் பங்கு கொள்ள இதைவிடவேறு சந்தர்ப்பம் இருப் பதாகத் தெரியவில்லை. பணத்தால் ஒரு உயிரைக் காப்பாற்றமுடியாது. இரத்த தானத்தினால் மட்டுமே அது சாத்தியமா கும். இதை ஒரு சிறந்த கொடையாகக் கருதி ஒவ்வொருவரும் இரத்ததானம் செய்ய முன்வரவேண்டும். இன்றைய நிலையில் இதுவே எம்முன்னுள்ள முக்கிய தேவையாகும் என்றார்.

**சந்திப்பு: நம்பி**

### வைத்தியர் குழு எப்போதும் தயார்

உரிய பரிசோதனைகளின் பின்னரே இரத்தம் எடுக்கப்படுகின்றது. யாழ்.போதனா வைத்தியசாலையில் தினமும் காலை 8 மணிமுதல் பி.ப. 4.மணிவரை இரத்ததானம் செய்யமுடியும். குழுவாக இரத்ததானம் செய்யவிரும்புபவர்கள் தங்களுக்கு தக வல்தரும் பட்சத்தில் குறிப்பிடும் இடத்திற்கு நேரடியாகச் செல்ல வைத்தியர்குழு தயா ராக உள்ளதெனவும் டாக்டர் சிவசங்கர் தெரிவித்தார்.

பல்வேறு பணிகளின் மத்தியிலும் யாழ்.போதனா வைத்தியசாலையின் வைத் தியர்கள், தாதியர்கள் மற்றும் உத்தியோகத் தர்கள் அனைவருமே இரத்ததானம் செய் வதில் ஆர்வமுடன் ஈடுபடுகின்றனர். இது எமது போதனா வைத்தியசாலைக்கு பெருமை சேர்க்கின்றது. இதில் எல்லா மக்களுமே முழு மனதுடன் கலந்துகொண்டு இரத்த தானம் செய்வதன் மூலம் இங்கு நிகழும் தேவையற்ற இறப்புக்களில் இருந்து அநேகரைக் காப்பாற்ற முயல்தல் வேண்டும்.

* * * *

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தக் கோருகின்றது மன்னிப்புச்சபை

## இலங்கை அரசுக்கு வற்புறுத்தல்

லண்டன், ஜூன் 13

இலங்கையில் அதிகரித்துவரும் மனித உரிமை மீறல் துஷ்பிரயோக நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்துவதற்காக ஐக்கிய நாடுகள் மனித உரிமை கவுன்ஸிலின் நடைபெற்று முடிந்த எட்டாவது கூட்டத் தொடரில் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துமாறு சர்வதேச மன்னிப்புச்சபை இலங்கையைக் கேட்டுள்ளது.

பல நாடுகள் தொடர்ச்சியாக வேண்டுகோள் விடுத்தபோதிலும் ஐ.நா. கண்காணிப்புக் குழுவொன்றை அமைக்குமாறு முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரையை இலங்கை ஏற்றுக்கொள்ளாதது பெரும் கவலையளிப்பதாகவுள்ளது என்றும் மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

இலங்கையில் மோதல் நடைபெறும் வறிய மக்களின் பகுதிகளில் வாழும் சிறுவர்களின் சுகாதார, போஷாக்கு குறித்தும் கவலை வெளியிட்டுள்ள மன்னிப்புச் சபை, மோதல் நடைபெறும் பகுதிகளுக்கு மனிதநேயப் பணியாளர்கள் முழுமையாக - தடைகளின்றி - செல்வதற்கான அனுமதியை வழங்குமாறும் இருதரப்பையும் கேட்டுள்ளது.

இதன் மூலம் மனிதாபிமான உதவிகள் மிகவும் அவசியமாகத் தேவைப்படும் மக்களுக்கு அவற்றை வழங்கலாம் எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மனித உரிமைக் கவுன்ஸிலின் கூட்டத் தொடரில் இலங்கையில் வலுவான சட்டத்தின் ஆட்சிக்கான தடைகள் குறித்த கவலையைப் பல நாடுகள் வெளியிட்டன என மன்னிப்புச்சபை தெரிவித்துள்ளது.

மேலும் ஆயுதக் குழுக்களின் இருப்புக் குறித்து இலங்கை அரசு வெளிப்படுத்தும் தயக்கம் பற்றியும் உலக நாடுகள் கவலை வெளியிட்டுள்ளன என மன்னிப்புச்சபை மேலும் தெரிவித்துள்ளது.

தடுத்துவைக்கப்படுபவர்கள் தொடர்பாக பதிவொன்றை அரசு பேண வேண்டியது அவசர தேவையாகவுள்ளது. குறிப்பாக அவசரகாலச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்கள் குறித்து இவ்வாறான பதிவேடு அவசியம்.

- இவ்வாறு மன்னிப்புச்சபை மேலும் தெரிவித்துள்ளது.

## எரிவாயுவின் விலை மீண்டும் உயருமா?

எரிவாயு விலை அதிகரிப்புத் தொடர்பான இறுதி முடிவை இம்மாத இறுதிக்குள் வெளியிடவுள்ளதாக நுகர்வோர் அதிகாரசபை தெரிவித்திருக்கிறது.

எரிவாயுகளின் விலைகளை அதிகரிப்பதற்கான அனுமதியை இரண்டு எரிவாயு நிறுவனங்கள் கோரியுள்ளன என்று நுகர்வோர் அதிகாரசபையின் தலைவர் ரூபி மர்சூக் தெரிவித்திருக்கிறார்.

இந்த இரண்டு நிறுவனங்களின் கோரிக்கைகளும் விசேட தொழில்நுட்பக் குழு ஒன்றின் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளன என்றும் - அவர் குறிப்பிட்டார்.

விலை அதிகரிப்புத் தொடர்பான தீர்மானத்தை மேற்கொள்வதற்காக நுகர்வோர் அதிகாரசபையின் நிறைவேற்றுக் குழு அடுத்த இரண்டு வாரங்களில் கூடி முடிவு எடுக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(க- 09)

# நியாயமான- ஏற்கத்தக்க தீர்வு முன்வைக்கப்படுமானால் வடக்கு மக்கள் பயங்கரவாதத்தை அடியோடு நிராகரிப்பார்கள்

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா இப்படிச் சொல்கிறார்

கொழும்பு, ஜூன் 13

''நியாயமான - ஏற்றுக்கொள்ளத்தக்க - அரசியல் - தீர்வு ஒன்று முன்வைக்கப்படுமானால் - வடக்கு மக்கள் இந்தப் பயங்கரவாத அரசியலை அடியோடு நிராகரிப்பார்கள் என்பது நிச்சயம்.''

''இலங்கை சுதந்திரம் பெற்ற நாள் முதல் நீண்ட காலமாகவே அது அனுபவித்து வந்த சுதந்திரம், ஜனநாயகம், ஜனநாயகக் கட்டமைப்புக்கள், பாரம்பரியங்கள் போன்றவை எல்லாமே இன்று பெரும் ஆபத்தை எதிர்கொண்டுள்ளன. இந்தப் போக்கை தடுத்து நிறுத்த முடியாது என அரசு கூறுமானால் அது ஏற்றுக்கொள்ள முடியாததாகும்.''

- இவ்வாறு தற்போதைய நாட்டின் நிலைமையை விமர்சித்திருக்கின்றார் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

மங்கள சமரவீர எம்.பியின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மக்கள் பிரிவு அணி நேற்று முன்தினம் நடத்திய அதன் பிரதிநிதிகளின் அங்குரார்ப்பண மாநாட்டில் சிறப்புரை ஆற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

கொழும்பு புதிய நகர மண்டபத்தில் இந் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.



எதிர்க்கட்சித் தலைவரும் ஐ.தே.கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க, மேலக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் ஆகியோரும் அங்கு சிறப்புரை ஆற்றினர்.

ஜனாதிபதி பதவியைத் துறந்த பின்னர் சந்திரிகா குமாரதுங்க அரசியல் கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு பகிரங்கமாகக் கருத்து வெளியிட்டமை இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது.

அங்கு அவர் கூறிய கருத்துக்களின் சாராம்சம் வருமாறு:-

ஒரு நாட்டின் மக்களுக்கான அடிப்படை உரிமைகள் மறுக்கப்படுமானால், பொறுப்புடனும் சுதந்திரப் பாங்குடனும் அந்தச் சமுதாயம் முன்னோக்கி நடைபோடுவதில் பெரும் பாதிப்பும் பின்னடைவும் ஏற்படும். இறுதியாக அது பெரும் பொருளாதாரப் பின்னடைவையே ஏற்படுத்தும் என்பதும் எங்களுக்குத் தெரியும்.

அத்தோடு சரியான - பொருத்தமான - ஆக்கபூர்வமான - சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்ற பொருளாதாரத்திட்டம் ஒன்று அரசுக்கு இல்லாவிட்டால் நாட்டின் பொருளாதாரம் மேலும் சீர்கெடும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தெளிந்த பார்வை, தீவிரவாதத்துக்கு எந்த வகையிலும் இடமளிக்காது.

அதன் ஸ்தாபகர் பண்டாரநாயக்க முன்னர் செல்வநாயகத்துடன் செய்து கொண்ட ஒப்பந்தத்திலும், 1994இல் முன்மொழியப்பட்ட யோசனைகளிலும் சிறுபான்மையினருக்கான அதிகாரப் பகிர்வு குறித்து விவரிக்கப்பட்டிருந்தது.

ஆனால், சிறிய குழுவினருடனான தீவிரப் போக்காளர்களால் - அந்த இரண்டு முயற்சிகளுமே குழப்பியடிக்கப்பட்டன.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மிதவாதப் போக்கையே பின்பற்ற வேண்டும். கட்சிக்குள்ளிருந்து அராஜகங்களும், அடாவடித்தனங்களும், ஊழலும் அடியோடு அகற்றப்படவேண்டும்.

எதிர்த்தரப்புக் கருத்துக்கு இடமளிக்காமல் அதிகாரம் மூலம் கட்சியைக் கொண்டு நடத்தும் போக்குக்கு கட்சி விட்டுக் கொடுக்கக் கூடாது - என்றார் அவர். (உ)

## இறந்தவரை சக்கர நாற்காலியில் வைத்து இந்தியாவுக்குக் கடத்த முயன்றவர் கைது!

சென்னை, ஜூன்14

இறந்தவரை சக்கர நாற்காலியில் இருத்தி அவர் நோயாளி எனத் தெரிவித்து இந்தியாவுக்குக் கொண்டுசெல்ல முயன்றவர் விமான நிலையத்தில் வசமாகச் சிக்கினார்.

இச்சம்பவம் நேற்றுக் கட்டுநாயக்க விமான நிலையத்தில் இடம் பெற்றுள்ளது.

இதுபற்றி மேலும் தெரியவருவதாவது:

இறந்த நபரைச் சக்கரநாற்காலியில் இருத்தி அவர் ஒரு நோயாளி எனக் கூறி விமான நிலையத்தின் உட்பகுதிக்கு அழைத்துச் சென்றுள்ளார் நபர் ஒருவர்.

இரண்டுகட்ட சோதனைகளை முடித்துக்கொண்டு இறுதிச் சோதனை பிரிவுக்குச் சென்றவேளை இவர் வசமாக மாட்டிக் கொண்டார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தநபரை விமான நிலைய சுங்க அதிகாரிகள் கைதுசெய்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (க-03)

# படைத் தரப்பினரின் தாக்குதல்களால் மே மாதத்தில் வடக்கில் 62 பேர் பலி!

## புலிகளின் சமாதானச் செயலகம் தெரிவிப்பு

படையினரின் தாக்குதல்கள் காரணமாக கடந்த மே மாதம் தமிழர் தாயகப் பிரதேசத்தில் 68 அப்பாவிப் பொதுமக்கள் படுகொலை செய்யப்பட்டனர். அத்துடன், 44 பேர் கடத்திச் செல்லப்பட்டுள்ளனர்.

இத்தகவலை விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகம் விடுத்துள்ளது. அதன் மாதாந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

படையினரின் ஆழ ஊடுருவும் அணியினர் நடத்திய கிளைமோர்த் தாக்குதலில் வன்னியிலே அதிகமான அப்பாவிப் பொது மக்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். கொல்லப்பட்டவர்களில் கிளைமோர்த் தாக்குதலில் ஐந்து சிறுவர்களும், படையினரின் வான் தாக்குதலில் இரண்டு சிறுவர்களும் அடங்குவர்.

யாழ்ப்பாணம் மண்டைதீவுக்கு அண்மையாகவுள்ள சிறுதீவுத் தாக்குதலைத் தொடர்ந்து குடாநாட்டில் படையினர் மேற்கொண்ட ஷெல் தாக்குதலில் ஆறு பொது மக்கள் கொல்லப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அம்பாறை தேர்தல் வழக்கு: எதிர்த்தரப்புக்கு நோட்டீஸ்!

கொழும்பு, ஜூன் 14

அம்பாறை மாவட்டத்தில் இடம் பெற்ற கிழக்கு மாகாண சபைத் தேர்தலை ஆட்சேபித்துத் தாக்கல் செய்யப்பட்டிருந்த மனுவை பரிசீலனைக்கு ஏற்றுக் கொண்ட தேர்தல் நீதிமன்றம், எதிர் மனுதாரர்களுக்கு எதிர்வரும் ஜூலை 11ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு நோட்டீஸ் பிறப்பிக்கவும் உத்தரவிட்டது.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் சரத் ஆப்ரூ முன்னிலையில் இது தொடர்பான மனு நேற்று முன்தினம் எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு வழங்கப்பட் டது.

இத்தேர்தலில் ஐ.தே.கட்சிப் பட்டியலில் போட்டியிட்ட ஹஸன்அலி, தயா கமகே ஆகியோர் இந்த மனுவைத் தாக்கல் செய்திருந்தனர்.

தேர்தல் ஆணையாளர், அம்பாறை மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் உட்படப் பலர் இந்த மனுவில் எதிர் மனுதாரர்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர் என்பது தெரிந்ததே. (உ)



கோண்டாவில் சிவபூமி மாணவர்களின் கைப்பணிப் பொருள் கண்காட்சி இவ்வார நடுப்பகுதியில் இடம்பெற்றது.
கண்காட்சி மண்டபத்தை வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் திறந்து வைப்பதை முதலாவது படத்திலும் காட்சிப்படுத்தப்பட்டிருந்த பொருள்களை அடுத்த இரண்டு படங்களிலும் காணலாம்.
(படங்கள்: நேசன்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# காணாமற்போவோர் பிரச்சினை: இல்லாமற் போவது எப்போது?

இலங்கையில் கடந்த ஒரு சில மாதங்களில் ஆள்கள் காணாமற்போதல் அதிகரித்துள்ளமை குறித்து ஐ.நாவின் முக்கிய பிரிவு ஒன்று ஆழ்ந்த கவலை வெளியிட்டிருக்கின்றது.

பலவந்தமாக - அல்லது சுயவிருப்பின்றி - ஆள்களைக் காணாமற் போகச் செய்தல் தொடர்பான ஐ.நாவின் செயற்குழுவே இவ்வாறு கவலை தெரிவித்திருக்கின்றது.

இப்பிரச்சினைக்குத் தீர்வுகாணும் முயற்சிகள் இங்கு சிறிதளவேனும் இடம்பெறவில்லை என்றும் அது வெளிப்படையாகவே சுட்டிக்காட்டியிருக்கின்றது.

அதேசமயம், ஆள்களைப் பலவந்தமாகக் கடத்திக் காணாமற் போகச் செய்தல் உட்பட இலங்கையில் அதிகரித்து வரும் மோசமான மனித உரிமை மீறல்கள் மற்றும் துஷ்பிரயோக நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்தும்படி கோரியுள்ள ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் கவுன்ஸில் இது தொடர்பாக முக்கிய சில பரிந்துரைகளையும் இலங்கைக்குச் செய்திருக்கின்றது.

ஜூன் முதல் வாரத்தில் ஜெனிவாவில் நடைபெற்று முடிந்த கவுன்ஸிலின் எட்டாவது கூட்டத் தொடரில் பல்வேறு அங்கத்துவ நாடுகளும் தெரிவித்த கருத்துகளின் அடிப்படையிலேயே இந்த சிபாரிசுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இந்தப் பரிந்துரைகளை அப்படியே நடைமுறைப்படுத்துவதன் மூலம், இலங்கையில் தற்போது மோசமாக அதிகரித்து வரும் மனித உரிமைத் துஷ்பிரயோகங்களைத் தடுத்து நிறுத்த ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்கும்படி இலங்கை அரசை சர்வதேச மன்னிப்புச்சபை கோரியிருக்கின்றது.

ஆனால் இக்கோரிக்கைகளும், கவலை தெரிவிப்புகளும் இலங்கையைப் பொறுத்தவரை புறக்குடத்தில் ஊற்றிய நீராக வீணாகும் என்பது எப்போதோ தெரிந்த விடயம்.

அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளில் தொடரும் ஆள் கடத்தல்கள், காணாமற் போகச் செய்தல் போன்ற கொடூரங்கள் அரச பயங்கரவாதமாகவே அரங்கேறுகின்றன என்பது இன்று பரகசியமான உண்மையாகும்.

கொழும்பிலும் சுற்றுப் புறங்களிலும் தினசரி பலவந்தமாகக் கடத்திச் செல்லப்படுகின்றவர்களில், சிலராவது பின்னர் விடுதலையாகித் திரும்பி வருகின்றமை பற்றிய தகவல்கள் இப்போது வெளியாகியுள்ளன.

இவ்வாறு விடுதலையானோரை விசாரித்தால் இத்தகைய ஆள்கடத்தல்களின் சூத்திரதாரிகள் யார் என்பது உள்ளங்கை நெல்லிக்கனியாக அம்பலமாகும். இவர்களைக் கண்டறிவதற்கு நீண்ட விசாரணைகளோ, உயர்மட்ட ஆணைக்குழுக்களோ, நுண்ணிய புலனாய்வோ தேவையற்றவை.

விசாரணைக்கு உட்படுத்தப்படவேண்டிய சந்தேக நபரின் எதிர்காலத் தலைவிதி எப்படி அமைய வேண்டும் என்பதை அவரை வளைத்துப் பிடித்து விசாரித்த பின்னர்தான் தாங்கள் தீர்மானிக்க வேண்டியிருக்கும் எனக் கருதும் அதிகாரத்தின் - ஆட்சிப் பீடத்தின் - அரூபக் கரங்கள், அதற்காகக் கைதுகளை, தங்களை அடையாளப்படுத்தாமல் கடத்தல்களாக முன்னெடுக்கின்றன என்பதே இன்றைய நிலைமை.

ஆள்கடத்தல்களாக முன்னெடுக்கப்படும் கைதுகளின் பின்னர், இப்படிக் கடத்தப்படுபவர் 'உரிய முறையில்' விசாரிக்கப்படுகின்றார். அந்த விசாரணைகளில் சிக்கலுக்குரியவராகத் தோற்றுபவர் பின்னர் ஒரேயடியாகக் 'காணாமல்'போய்விடுகிறார். சிக்கலுக்குரியவர்கள் அல்லர் என்று கருதப்படுபவர்கள் பின்னர் விடுவிக்கப்படுகின்றனர். அதுவும் முன்பு எப்படி மர்மமாகக் கடத்தப்பட்டாரோ அதேபோன்று மர்மமான வகையில் - இடத்தில் - விடுவிக்கப்படுகின்றார்.

சந்தேக நபர் ஒருவரைக் கைது செய்வது எப்படி, அதன் போது பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் எவை; கைதுக்கு உள்ளாகின்றவருக்கு இருக்கின்ற உரிமைகள் எவை என்பவை போன்ற விடயங்களை எல்லாம் உள்ளடக்கிப் பெரிய பல விளம்பரங்களை - குறிப்பாக ஆங்கில வார இதழ்களில் - மனித உரிமை, இடர் முகாமைத்துவ அமைச்சு பெரும் நிதி செலவழித்து சில மாதங்களுக்கு முன்னர் வெளியிட்டிருந்தது பலரும் அறிந்ததே. இதன் மூலம் மனித உரிமைகளை நிலைநாட்டுவதில் தனது அமைச்சு வெகு கரிசனையாகவும், தீவிரமாகவும் இருக்கின்றது என்பது போன்ற படத்தை அந்த அமைச்சு கொழும்பில் வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கும், தூதுவர்களுக்கும், பிரமுகர்களுக்கும் காட்டிக்கொண்டது.

ஆனால் அந்த விதிமுறைகள் எவையுமே பின்பற்றப்படாமல் ஆள்கடத்தல் அராஜகம் என்ற பெயரில் தமது கைவரிசையைக் காட்டிக் கொண்டு தமது கொடூரத்தைத் தொடர்கின்றன அரச அதிகாரத்தின் அரூபக் கரங்கள். இப்போது 'நவீன கைதுகள்' கடத்தல் வடிவத்தில்தான் அரங்கேறுகின்றன. இப்படிச் சிக்குபவர்கள் சில சமயம் மீளலாம். பல சமயம் காணாமலே போகலாம் என்பதே இன்றைய நிலைமை.

'திருடனாகப் பார்த்துத் திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது!'' என்பார்கள்.

அதேபோலநாட்டில்ஆள்களைப்பலவந்தமாகக்கடத்திக் காணாமற் போகச் செய்யும் அதிகார வர்க்கத்தின் அரூபக் கரங்களும், இங்கு தாமாகத் திருந்திக்கொண்டு, சட்டத்திற்கும் ஒழுங்கிற்கும் மதிப்பளித்து, இத்தகைய கடத்தல் கொடூரங்களை விடுத்தொழிந்தாலன்றி, இப்பிரச்சினைக்கு சுமுகத் தீர்வு காண்பது சாத்தியமற்றது என்பது நிச்சயம்.

# சுவிஸ் அபிவிருத்தி அமைப்பின் பிரதிநிதிகள் செவ்வாயன்று குடாநாட்டுக்கு விஜயம்

## தமது திட்ட நிலவரம் குறித்து ஆராய்வர்

யாழ்ப்பாணம், ஜூன் 14

குடாநாட்டில் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்துவரும் சுவிஸ் அபிவிருத்தி அமைப்பின் பிரதிநிதிகள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை இங்கு வருகை தரவுள்ளனர்.

இந்த அமைப்பைச் சேர்ந்த பணிப்பாளர் மார்க்கஸ் பச்லர் திட்ட அதிகாரி பர்பாரா றெர்தலிஸ் பேகர் ஆகியோர் இங்கு வருகை தரவுள்ளனர்.

அன்றைய தினம் யாழ்.மாவட்டத்தில் இயங்கும் அரச துறையினரைச் சந்தித்து யாழ்.மாவட்டத்தின் தற்போதைய திட்ட நிலைவரம் குறித்தும் எதிர்காலத் திட்டங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடவுள்ளனர் என்று யாழ்.அரச அதிபர் க.கணேஷ் அறிவித்துள்ளார்.

யாழ்.செயலகத்தில் செவ்வாயன்று இக் கலந்துரையாடல் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக கூறப்பட்டது.(203 -51)

# பொலிகண்டியில் கொள்ளை

வடமராட்சி, ஜூன் 14

பொலிகண்டிப் பகுதியில் உள்ள வீடொன்றில் புகுந்த கொள்ளையர் வீட்டுக்காரரை கத்தி முனையில் வைத்துக்கொண்டு அங்கிருந்த தாலிக்கொடி மற்றும் 40 ஆயிரம் ரூபா பணம், கைத்தொலைபேசி என்பவற்றையக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

கடந்த 4ஆம் திகதி சுப்பிரமணியம் நரேந்திரன் என்பவருடைய வீட்டிலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. மின்சாரம் தடைப்பட்டிருந்த வேளையில் இக்கொள்ளை நடைபெற்றிருக்கிறது. சம்பவம் தொடர்பாக வல்வெட்டித்துறை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (203-236)

# யாழ்.விவசாய அபிவிருத்தி மாநாடு திங்களன்று வீரசிங்கம் மண்டபத்தில்

யாழ்ப்பாணம், ஜூன்14

குடாநாட்டில் உள்ள விவசாய உற்பத்திகளை அதிகரித்தல் அவற்றுக்கான சந்தை வாய்ப்பை ஏற்படுத்துதல், விவசாய உள்ளீடுகளை இலகுவாக வழங்குதல் மற்றும் உள்ளூரில் நியாய விலையினை நிர்ணயித்தல் போன்ற விடயங்கள் தொடர்பில் தீர்மானங்களை மேற்கொள்ளும் முகமாக உயர்மட்ட மாநாடொன்று நாளை மறுதினம் திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு யாழ் வீரசிங்கம் மண்டபத்தில் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெறவுள்ளது.

இம்மாநாட்டில் விவசாயத்துறை சார்ந்த அரச அதிகாரிகள், விவசாயத்துறையுடன் தொடர்புள்ள ஏனைய துறைகளைச்சார்ந்த அரச அதிகாரிகள், பாதுகாப்புத் தரப்பின் உயரதிகாரிகள் உட்பட உரிய அனைத்துத் தரப்பினரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

உள்ளூர் விவசாய உற்பத்தியாளர்களதும் நுகர்வோரினதும் நன்மை கருதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இம்மாநாட்டில் யாழ்.குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் செயற்பட்டு வருகின்ற விவசாய சம்மேளனம் சார்பில் அவற்றின் தலைவர், செயலாளர் அல்லது பொருளாளர் தவறாது கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (1)

# ஆழிப்பேரலை பாதித்த சக்கோட்டை, இன்பருட்டி கிராமங்களில் வீடுகள் கையளிக்கும் நிகழ்வு நாளை

கரவெட்டி, ஜூன் 14

ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட சக்கோட்டை இன்பருட்டி கிராமங்களில் அமைக்கப்பட்ட வீடுகள், மண்டபங்கள் கையளிக்கும் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி தொடக்கம் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் விருந்தினராக போரூட்டின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி நெர்ஜே ஹெக்ஜேனர்ஸ், யாழ். அரச அதிபர் கே.கணேஷ் ஆகியோர் கலந்துகொள்வர்.

சிறப்பு விருந்தினர்களாக போரூட்டின் இலங்கைக்கான பதில் பிரதிநிதி திருமதி சயன்துங்க, போரூட் நிறுவன இலங்கைக்கான நிதி இயக்குநர் எம். இசறி முஸைன் அங்கார், தொழில் நுட்ப உத்தியோகத்தர் தம்மிகா ஜெயசிங்க, பருத்தித்துறை பிரதேச செயலர் இ.வரதீஸ்வரன், கரவெட்டி பிரதேச செய லர் சி.சத்தியசீலன் ஆகியோர் கலந்து கொள்வர். (203-236-70)

# ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவிலிருந்து கலாநிதி நேசையாவை விலகுமாறு பணிப்பு

கொழும்பு, ஜூன்14

ஜனாதிபதி விசாரணை ஆணைக் குழுவின் உறுப்பினரான கலாநிதி தேவநேசன் நேசையாவை ஆணைக் குழுவில் இருந்து நீக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பணிப்புரை விடுத்துள்ளார்.

ஆணைக்குழுவின் உறுப்பினரான இவர் மாற்றுக் கொள்கைக்கான நிலையத்துடன் தொடர்புகளைக் கொண்டவர். அந்த அமைப்பு பாதிக்கப்பட்டவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு செயற்படுகின்றது, என சட்டத்தரணி கோமின் தயாசிறி ஜனாதிபதி செயலகத்திற்கு எழுத்துமூலம் அறிவித்திருந்தார்.

பட்டினிக்கு எதிரான அமைப்பில் பாதிக் கப்பட்டவர்கள் சார்பில் மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் அக்கறை காட்டி வருகின்றது. எனவே அந்த அமைப்புடன் தொடர்புபட்ட தாங்கள் ஆணைக்குழுவிலிருந்து விலக வேண்டும் என நேசையாவிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக இதுவரை எந்தவொரு தீர்மானத்திற்கும் தான் செல்லவில்லை என கலாநிதி நேசையா கொழும்பு ஊடகமொன்றிற்கு தெரிவித்துள்ளார். இன்னும் ஓரிரு தினங்களில் அதற்கான பதிலை அனுப்பி வைப்பேன் என்றும் அவர் தெரிவித்தார். (1-202)

# லஞ்சம் வாங்கிய ஆசிரியருக்கு 4 ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை!

கொழும்பு, ஜூன்14

ஒரு மாணவியை பாடசாலையில் அனுமதிப்பதற்காக லஞ்சம் பெற்றார் என்ற குற்றச்சாட்டின் மீது ஆசிரி யர் ஒருவருக்கு கொழும்பு மேல்நீதி மன்ற நீதிவான்நான்குஆண்டுகள்கடுங்காவல் தண்டனை விதித்து தீர்ப் பளித்தார்.

மாணவி ஒருவரை மொறட்டுவ பிரின்ஸ் ஒப் வேல்ஸ் பாடசாலையில் சேர்ப்பதற்கு அவருடைய தாயாரிடமிருந்து 10 ஆயிரம் ரூபாயை 2001 ஆம் ஆண்டு ஏப்ரல் 4 ஆம் திகதி லஞ்சமாகப் பெற்றார் என்று எம்.எம். விஜிதா லக்ஸிமி என்ற ஆசிரியர் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

கீஷான் துலஞ்சனா என்ற மாணவியை பாடசாலையின் மூன்றாம் தரத்தில் சேர்ப்பதற்கு அவர் ரணசிங்க ஆராச் சிலாகே சந்திரலதா என்பவரிடம் பத் தாயிரம் ரூபாய் லஞ்சம் பெற்றார் என்று சாட்சியங்களிலிருந்து தெரிய வந்தது. பாடசாலையில் அனுமதிக்கப்பட்டு மூன்று மாதங்களின் பின்னர் மாணவி வெளியேற்றப்பட்டார் என்பது சாட்சி யங்களிலிருந்து தெரியவந்துள்ளது.

சம்பந்தப்பட்ட ஆசிரியருக்கு நான்கு ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை விதித்த மேல் நீதிமன்ற நீதிவான் திலக்தாப்று 10 ஆயிரம் ரூபா அபராதமும் விதித்தார். இந்த வழக்கில் குற்றம் சந்தேகத்துக்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாக நீதிவான் குறிப்பிட்டார். லஞ்சம் பெற்ற பணத்தையும் அபராதமாக செலுத்துமாறு குற்றவாளிக்கு உத்தரவிடப்பட்டது. (ப)

## நாளை

| | |
|---|---|
| ஆனி 01 | 15.06.2008 ஞாயிற்றுக்கிழமை |
| திதி: | துவாதசி மாலை 5.54 |
| நட்சத்திரம் : | சுவாதி காலை 08.36 |
| சுபநேரம் : | 08.53 - 10.23 |
| [illegible] | [illegible] |

## நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள போதும்

# அம்பன் கிராமத்திற்கு இதுவரை மின்சார வசதிகள் மேற்கொள்ளப்படவில்லை

வடமராட்சி, ஜூன்14

வடமராட்சி கிழக்கு (மருதங்கேணி) உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட அம்பன் கிராமத்திற்கு மின்சாரம் வழங்க நிதி ஒதுக்கீடு செய்து நான்கு மாதங்களுக்கு மேலாகியும், இன்னமும் மின் இணைப்புக்கான வேலைகள் ஆரம்பிக்கப்படாமை குறித்து அம்பன் மக்கள் பெரும் அதிருப்தியும் கவலையும் வெளியிட்டுள்ளனர்.

இப்பிரிவில் உள்ள மணல்காடு, குடத்தனை கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கி ஒரு வருடத்திற்கு மேலாகிவிட்டது.

ஆனால், குடத்தனைக்கு மிக அருகில் உள்ள அம்பன் கிராமத்திற்கு இதுவரை மின்சாரம் வழங்கப்படவுமில்லை. அதற்கான வேலைகள் ஆரம்பிக்கப்படவும் இல்லை என்று கூறப்படுகிறது.

கடந்த நான்கு மாதங்களுக்கு முன்பு வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு விஜயம் செய்த யாழ்அரச அதிபரிடம் இது தொடர்பாக எடுத்துக் கூறப்பட்டது.

இதனை ஏற்றுக் கொண்ட யாழ். அரச அதிபர் அம்பன் கிராமத்திற்கும் மின் இணைப்பை மேற்கொண்டு மின்சாரம் வழங்குவதற்கென மிக அவசரமாக 8 மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்திருந்தார்.

உயர் அழுத்த, தாழ் அழுத்த மின் மார்க்க நிர்மாணத்திற்கென இந்நிதி ஒதுக்கப்பட்டுள்ள போதிலும் இவற்றில் எந்த வேலையும் இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லை என இக் கிராம மக்கள் ஆதங்கப்படுகின்றனர்.

இக் கிராமத்தில் மின்சார விநியோகம் மேற்கொள்ளப்படாமையினால் இங்குள்ள பாடசாலையில் தகவல் தொழில் நுட்பப் பாடத்தை கற்பிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அத்துடன் ஏனைய செயற்பாடுகளையும் மேற்கொள்ளமுடியாத நிலையே காணப்படுகிறது.

இக் கிராமத்திற்கான மின் இணைப்பை தாமதமின்றி மேற்கொண்டு மின்சாரத்தை வழங்க உரிய அதிகாரிகள் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என கிராம மக்கள் கோரிக்கைவிடுத்துள்ளனர்.(203-236)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய மட்டத்தில் வெற்றிகளை ஈட்டும் யாழ்.வீரர்கள் பாராட்டுக்குரியவர்கள்; கௌரவிக்கப்பட வேண்டியவர்கள்

கொழும்பில் இடம்பெற்ற கனிஷ்ட பிரிவினருக்கான தடகள போட்டியில் கலந்து கொண்ட வீரர்கள், வீராங்கனைகள் பற்றிய விமர்சனம் ஒன்று தற்போது விளையாட்டுத்துறை சார்ந்த வட்டாரங்களில் எழுந்துள்ளது.

யாழ்.மாவட்டத்தில் இருந்து பத்து வீரர்கள், வீராங்கனைகள் கொழும்பு சுகததாஸ விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற போட்டிகளில் கலந்து கொண்டனர்.

இலங்கை மெய்வல்லுநர் சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இப்போட்டிக்கு என்ன அடிப்படையில் உரிய வீர, வீராங்கனைகள் தெரிவு செய்யப்பட்டார்கள் என்ற விமர்சனம் பாடசாலைகள் மட்டத்தில் மிகவும் பலத்த கேள்விகளாக எழுந்துள்ளது.

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

போட்டிக்குச் சென்றவர்கள் அனைவரும் தெரிவுப் போட்டிகளில் வெற்றியீட்டி இறுதிப்போட்டியில் கலந்து கொண்டு தேசிய மட்டத்தில் முதல் ஏழு இடங்களுக்குள் வந்துள்ளார்கள்.

இதில் இருவர் தட்டெறிதலில் 2ஆம் இடத்தையும், கோலூன்றிப் பாய்தலில் 3ஆம் இடத்தையும் பெற்றுள்ளார்கள். இந்நிலையில் இவர்களிலும் திறமையானவர்கள் இங்கு இருந்து அவர்கள் இந்தப் போட்டிக்குத் தெரிவு செய்யப்படாமல் விடப்பட்டிருந்தால் அந்தச் செயல் நிச்சயம் கண்டிக்கப்படவேண்டியது. அவ்வாறு இடம்பெற்றிருந்தால் அது ஒரு ஊழல் நடவடிக்கையே.

வடமாகாண மட்டத்தில் இடம்பெறவுள்ள பெருவிளையாட்டுக்கள், தடகளப் போட்டிகளுக்கு பாடசாலை மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட யாழ்.மாவட்ட அணி தயாரான நிலையில் உள்ளது.

இறுதி நேரத்தில் யாழ்.கல்வி வலயத்தைச் சேர்ந்த இரு அணிகள் மாகாணமட்டப் போட்டியில் கலந்து கொள்வதில்லையென முடிவெடுத்துள்ளதாகத் தெரிய வருகின்றது.

இந்த இடத்தை தமக்கு தரும்படி அடுத்த நிலையில் உள்ள வலிகாமம் கல்வி வலயப் பாடசாலையொன்று கேட்டுள்ளது. அதற்குச் சம்பந்தப்பட்ட தரப்புகள் தாங்கள் இதற்கு ஒன்றும் செய்யமுடியாது என்று கூறி அந்தப் பாடசாலை அணியை அனுப்பப் பல காரணங்கள் கூறுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஒரு பாடசாலை தன்னால் போட்டிக்குச் செல்ல முடியாது என்றால் அதற்கு ஏதோ காரணம் இருக்க வேண்டும். அந்தக் காரணம் உரிய அதிகாரிகளுக்குத் தெரிந்திருக்கத்தான் வேண்டும்.

அவ்வாறாயின் அடுத்த நிலையில் உள்ள பாடசாலை அணியை அனுப்புவதற்குத் அதிகாரிகள் ஏன் பின்னடித்து வருகின்றார்கள்? அதற்கான காரணம் என்ன?

மாகாண மட்டத்தில் இடம்பெறும் போட்டிகளுக்கு சில பாடசாலைகள் செல்ல மறுத்துள்ளதைப் போன்று தேசிய மட்டத்தில் இடம்பெற்ற கனிஷ்ட தடகளப் போட்டிக்கு வீரர்களை அனுப்பும் விடயத்திலும் போக்குவரத்துக்கான பணம் என்ற விடயத்தை கருத்தில் கொண்டு சில பாடசாலைகள் மறுத்தன.

துணிந்து அனுப்பிய பாடசாலைகள் வெற்றிகளைப் பெற்றுக் கொண்டதுடன் போக்குவரத்துக்கு செலவு செய்த பணத்தையும் பெற்றுக்கொண்டுள்ளன.

போட்டிகள் முடிந்து வீரர்கள் திரும்பி வந்த பின்னர் போட்டிகள் தொடர்பாக எமக்கு எதுவும் தெரியாது, போக்குவரத்துச் செலவு தரப்படும் என்று கூறப்பட வில்லை. என நொண்டிச் சாட்டுக்கள் கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

திறமையும் ஆற்றலும் உள்ள வீரர்களைக் கொண்ட பாடசாலைகள் போட்டிக்குச் சென்றனர். ஏனைய பாடசாலைகள் தமது தலைமையில் அவ நம்பிக்கை காரணமாக வீரர்களை அனுப்பவில்லை என்கிறார் அதிகாரி ஒருவர்.

தேவையற்ற விமர்சனங்களை நீதியானது, நியாயமானது என்று கூறமுடியாது. சென்ற வீரர்களையும் இவர்களை அனுப்பியவர்களையும் விமர்சிப்பதை விடுத்து அவர்களின் சாதனைகளைப் பாராட்டுவதே விளையாட்டுத் துறையை மேலும் வளர்க்க உதவியாக இருக்கும்.

## பதவிகளையும், கதிரைகளையும் கைப்பற்றுவதற்கு விமர்சனங்களை முன்வைப்பது ஏற்றதல்ல

அடுத்த கட்டமாக எதிர் காலத்தில் இடம்பெறும் போட்டிகளுக்கு உரிய வீரர்களைத் தயார் படுத்தவேண்டும். இவர்களுடைய பெறுபேறுகள் உரிய முறையில் பேணப்பட வேண்டும். அடுத்தவர்களும் அதனை அறிந்து கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இதனை விடுத்து உரிய பதிவுகள், ஆதாரங்கள் இன்றி வெறும் வாய்ச் சவடால்கள் மூலம் சாதனைகளை ஏற்படுத்த முடியாது.

இதே வேளை-

அண்மையில் இடம்பெற்று முடிந்துள்ள யாழ்.மாவட்ட மெய்வல்லுனர் சங்கத்தின் பொதுச்சபைத் தெரிவு பல்வேறு விமர்சனங்களுக்கு உள்ளாகியுள்ளது.

ஏற்கனவே யாழ். மாவட்ட மெய்வல்லுனர் சங்கத்தின் தலைவர், செயலாளர் ஆகியோர் தமது கடமை நிமித்தம் யாழ். மாவட்டத்தை விட்டு வெளியேறியுள்ளார்கள். இவர்கள் இருவரும் இல்லாத நிலையிலும் நிர்வாகக் குழுக் கூட்டங்கள் இடம்பெற்றுள்ளன.

யாப்பு விதிகளுக்கு அமைவாக உரிய கூட்டம் இடம் பெற்று இருக்க வேண்டும். அதே போன்று கூட்டத்தில் கலந்து கொள்ள முடியாதவர்களும் கௌரவமாக தமது பதவிகளை ராஜினாமாச் செய்து அடுத்தவர்களை இயங்க வழிவிட்டு இருக்க வேண்டும்.

அதனை செய்யாது பொது கூட்டம் கூட்டப்பட்டு பொதுச் சபையின் பெரும்பான்மை அங்கத்தவர்கள் கலந்து கொண்டு எடுத்த முடிவை பதவிகளை எதிர்பார்த்துக் கிடைக்காமல் போனவர்களும், சங்கத்தில் அங்கத்துவம் அற்றவர்களும் விமர்சிப்பது முழுமையான சுயநலமே.

ஏற்கனவே இதில் இருந்து கொண்டு அனுபவித்த வசதி வாய்ப்புகளை இழந்த தன் ஆதங் கமே இதுவன்றி வேறு ஒன்றும் அல்ல. விளையாட்டுடன் தொடர்புடைய இத்தகைய விடயத்தில் மிகவும் கண்ணியமாகவும் அவதானமாகவும் நடந்து கொள்ள வேண்டும்.

யாழ். மாவட்டத்தில் விளையாட்டுத் துறை வளர்க்கப்பட வேண்டுமானால் தேவையற்ற விமர்சனங்களும், போட்டிகளும் தவிர்க்கப்பட வேண்டும். துணிந்து ஒற்றுமையுடனும் செயல்பட்டு தேசிய மட்டத்தில் மேலும் பல சாதனைகளை நிலைநாட்ட அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

**வில்லன்**


## அறிவித்தல்

*கோயிலாக்கண்டி தெவிண்டன்பிட்டி அரிகரபுத்திர ஐயனார் வருடாந்த மகோற்சவம் ஆரம்பமாக உள்ளதால் ஞாயிற்றுக்கிழமை நாளை (15.06.2008) 10.00 மணிக்கு ஆலய மண்டபத்தில் கிராம உத்தியோகத்தர் **க.ஸ்ரீ விக்கினேஸ்வரராஜா** தலைமையில் கூட்டம் நடைபெற உள்ளது. பக்தர்கள் மற்றும் திருவிழா உபயகாரர்களைக் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

(75293) **ஆலய நிர்வாகத்தினர்.**



## பதவி வெற்றிடம்

சர்வோதய நிறுவனம், யுனிசெவ் நிறுவனத்தின் அனுசரணையுடன் இணைந்து நடத்தும் மிதிவெடி அபாய விழிப்புணர்வுக் கல்வித் திட்டத்திற்காக பின்வரும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் ஆண், பெண் இருபாலர்களிடமிருந்தும் கோரப்படுகின்றன.

**1. வெளிக்கள உத்தியோகத்தர்கள் (Field Officers)**

**தகைமைகள்:**

1. க.பொ.த (உ/த) பரீட்சையில் சித்தியடைந்தவராக இருத்தல் வேண்டும்.
2. 18 வயதிற்கு மேற்பட்டவராகவும் 45 வயதிற்குட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.
3. சிறந்த ஆரோக்கியமும், நன்னடத்தையும் உடையவராக இருத்தல் வேண்டும்.
4. மோட்டார் சைக்கிள் செலுத்தும் அனுமதிப்பத்திரம் உடையவராக இருத்தல் வேண்டும்.
5. குறிப்பிட்ட துறையில் முன் அனுபவம் உடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**2. நிதி உதவியாளர் (Finance Assistant)**

**தகைமைகள்:**

1. க.பொ.த (உ/த) வர்த்தகத்துறையில் கணக்கியல் உட்பட சித்தியடைந்திருத்தல் வேண்டும்.
2. விண்ணப்பதாரிகள் 45 வயதிற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
3. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம்/தொழில் நுட்பக் கல்லூரி ஒன்றில் கணக்கியல் துறையில் பட்டம் பெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
4. குறித்த பதவியில் ஆகக் குறைந்தது 2 வருட காலம் முன் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் யாவும் 19.06.2008 ஆம் திகதிக்கு முன்னர் கீழ்வரும் முகவரிக்கு கிடைக்க கூடியதாக தபால் மூலமோ/நேரிலோ அனுப்பி வைக்கப்பட ல் வேண்டும். தகுதியுடையவர்கள் மட்டுமே நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவார்கள்.

*இல.3, பிளச்சஸ் லேன்,*
*கண்டிக்குளி,*
*யாழ்ப்பாணம்.*

**மாவட்ட இணைப்பாளர்,**
**சர்வோதய மாவ[illegible]**
**நிலையம்.**


## தலைமைத்துவப் பயிற்சி

யாழ்ப்பாணம், ஜூன்14

கல்வியங்காடு செங்குந்தா இந்துக் கல்லூரியில் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு தலைமைத்துவப் பயிற்சி முகாம் நடைபெறவுள்ளது.

அதிபர் சி.பாலகுமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தின் செயலாளர் சுவாமி சித்ரூபானந்தா உரை நிகழ்த்துவார். (202)

## பங்கீட்டுக்குச் சீனி

நவாலி, ஜூன்14

மானிப்பாய் ப.நோ.கூசங்கத்தில் பங்கீட்டு அட்டைக்கு தற்போது சீனி வழங்கப்பட்டு வருகின்றது.

ஒன்று தொடக்கம் இரண்டு அங்கத்தவர்களுக்கு ஒரு கிலோ வீதம், மூன்றுக்கு மேற்பட்டவர்களுக்கு 2 கிலோ வீதமும் வழங்கப்பட்டு வருகிறது. (203-100)

## சாரதிகளை ஆள் சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை கொழும்பில்

வடமராட்சி, ஜூன்1

அரசகரும மொழித் திணைக்களத்துக்கு சாரதிகளை ஆள்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை அடுத்த மாதம் 12 ஆம் திகதி கொழும்பில் நடத்தப்படவுள்ளது.

இதனால் குடாநாட்டில் இருந்து இப்பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்கள் பெரும் நெருக்கடியை எதிர்கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது. (203-236)

## யாழ்.மாவட்டத் தமிழ்த் தினப் போட்டி

வலி.வடக்கு, ஜூன்14

யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையேயான தமிழ்த் தினப் போட்டிகள் எதிர்வரும் 20ஆம் திகதி தொடக்கம் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் இடம் பெறவுள்ளன.

20ஆம் திகதி எழுத்தாக்கப் போட்டியும், 22ஆம் திகதி நாட்டுக் கூத்தும், 28ஆம் திகதி [illegible] 29ஆம் திகதி குழு நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (203-86)


## உளமார வாழ்த்துகின்றோம்



இறை பணியில்
ஆண்டுகள் இருபத்தைந்து
அயராது
நிறைவு செய்யும்
அருட்திரு.
வரத்துங்கம் இராஜ்குமார்
அவர்களை
நிறைவான இறையாசியில்
உடற்பலத்துடன்
கிறிஸ்துவ பணியை
மக்களுக்கு தொடர்ந்தாற்ற
இறையருள் வேண்டி உளமார
வாழ்த்துகின்றோம்.

** 15.06.2008 காலை 7.30 மணிக்கு அடிகளாரின் 25 வருட ஊழியத்தை நிறைவாக நினைந்து இறை நன்றி செலுத்தும் திருவிருந்து வழிபாடு மானிப்பாய் திருச்சபையில் நடைபெறும்.*

**திருச்சபை மக்கள்,**
**மானிப்பாய்.**

(75294)



ஸ்ரீராமஜெயம்

## திருமண சேவை

61 ஆம் ஆண்டு, செவ்வாய் குற்றமுள்ள 14½ பாவமும், 68 ஆம் ஆண்டு, செவ்வாய் இல்லாத 28½ பாவமும், 73 ஆம் ஆண்டு செவ்வாய் இல்லாத 20 1/4 பாவமுடைய லண்டன் பிரஜா உரிமை பெற்ற மணமகன்களுக்கு 76 ஆம் ஆண்டு, 2 இல் செவ்வாய், 20 1/4 பாவமுடைய, 73 ஆம் ஆண்டு செவ்வாய் குற்றமுள்ள, 35 3/4 பாவமுடைய கனடா பிரஜா உரிமை பெற்ற மணமகன்களுக்கும், 76, 79 ஆம் ஆண்டு செவ்வாய் இல்லாத ஆஸ்திரேலியா மணமகன்களுக்கும், படித்த அழகான மணமகள் தேவை. லண்டன், ஆஸ்திரேலியா, கனடா, சுவிஸ், இத்தாலி ஆகிய நாடுகளில் பிரஜா உரிமை பெற்ற மணமக்களும், 76 ஆம் ஆண்டு செவ்வாய்குற்றமுள்ள 28 3/4 பாவமுடைய அபிவிருத்தி உத்தியோகதரும், 76 ஆம் ஆண்டு R.C வேத நிகழ்ச்சித்திட்ட உதவியாளராக வேலை செய்யும் மணமகனுக்கு படித்த அழகான மணமகள் தேவை. டாக்டர்கள், இஞ்சினியர்கள், லிகிதர்கள், பட்டதாரி ஆசிரியர்கள் பாவம் குறைந்த, கூடிய அரச உத்தியோகத்தரும் எம்மிடமுள்ளனர்.

**தொடர்பு:**

**கமலக்கண்ணன் திருமணசேவை**

*171/7 மனோன்மணி அம்மன் வடக்கு வீதி, நல்லூர். 0776070862*

(75295)



## துயர் பகிர்கின்றோம்



*எமது பாடசாலைச் சக ஆசிரியை*
திருமதி திரேசா ஜெயவதி அன்ரன் *அவர்களின்*
*அன்புத் தந்தை இளைப்பாறிய ஆசிரியர்*
திரு.அந்தோனிப்பிள்ளை பிரான்சிஸ் ரேவியர்
*அவர்கள் மறைந்த செய்தி கேட்டு பெருந் துயரடைகின்றோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அவரது ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.*
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!*

**ஆசான் அவை,**
யா/ மிருசுவில் அ.தக.பாடசாலை,
மிருசுவில்.

(75302)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியா - பாகிஸ்தான் இன்று இறுதி மோதல்!

## 3ஆவது லீக் ஆட்டத்தில் பங்களாதேஷ் 7 விக்கெட்டுகளால் இந்தியாவிடம் தோல்வி



சதமடித்த கம்பீர்

மிர்பூர், ஜூன் 14

முத்தரப்புத் தொடரின் கடைசி லீக் போட்டியில் கௌதம் கம்பீர் அதிரடியாகச் சதம் விளாச, இந்திய அணி பங்களாதேஷை 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வீழ்த்தியது. இதன் மூலம் இந்திய அணி இறுதியாட்டத்துக்கு ஜோராக முன்னேறியது. இன்று நடக்கும் பரபரப்பான இறுதியாட்டத்தில் பரம எதிரிகளான இந்தியா, பாகிஸ்தான் அணிகள் மோதுகின்றன.

பங்களாதேஷில் முத்தரப்பு ஒருநாள் கிரிக்கெட் தொடர் நடைபெற்றுவருகின்றது. நேற்றுமுன்தினம் மிர்பூரில் நடந்த கடைசி லீக் போட்டியில் இந்திய அணி, பங்களாதேஷ் அணியைச் சந்தித்தது. நாணயச் சுழற்சியில் வென்ற பங்களாதேஷ் அணித்தலைவர் அஷ்ரபுல் முதலில் துடுப்பாட்டத்தைத் தேர்வு செய்தார்.

பங்களாதேஷ் அணி தொடக்கத்திலேயே ஆட்டம் கண்டது. பிரவீண் குமார் வீசிய முதல் ஓவரில் ரமீம் இக்பால் 'டக் அவுட்' ஆனார். சிறிது நேரத்தில் ஆர்.பி.சிங் பந்தில் நபீஸ்(9) நடையைக் கட்டினார். இதற்குப் பின் அணித்தலைவர் அஷ்ரபுல், ரகீபுல் ஹசன் இணைந்து நம்பிக்கை தந்தனர். படுநிதானமாக ஆடிய அஷ்ரபுல் 36 ஓட்டங்களுடன் (67 பந்துகள்) வெளியேறினார். அடுத்து வந்த மஸ்பிகர் ரஹீம்(6), அலொக் கபாலி(20), மஹமுடுல்லா (24) ஆகியோர் விரைவாக விக்கெட்டைப் பறிகொடுத்து பவிலியன் திரும்பினர்.

ஒரு பக்கம் விக்கெட் வீழ்ந்தாலும், மறுபக்கம் உறுதிமிக்க ஆட்டத்தை வெளிப்படுத்திய ரகீபுல் ஹசன் 89 ஓட்டங்களைப் (5 பவுண்டரிகள்) பெற்றுக்கொடுத்து ஆட்டமிழந்தார். ஷேவாக் சுழலில் ஒரு சிக்ஸர் அடித்த மோட்டஸா 13 ஓட்டங்களை எடுத்தார். இறுதியில் பங்களாதேஷ் அணி 49.5ஆவது ஓவரில் 222 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுகளையும் இழந்தது.

சுலப இலக்கை விரட்டிய இந்திய அணிக்கு மீண்டும் ஒரு முறை ஷேவாக், கம்பீர் இணைந்து அசத்தல் தொடக்கம் தந்தனர். சிறப்பான துடுப்பாட்ட நிலையில் இருக்கும் ஷேவாக் வெளுத்து வாங்கினார். பர்கட் ரீசா வீசிய 6ஆவது ஓவரில் 3 பவுண்டரிகள் விளாசினார். பர்கட் ரீசா வீசிய 8 ஆவது ஓவரில் இம்முறை கம்பீர் 3 பவுண்டரிகள் அடிக்க, ஓட்டஎண்ணிக்கை படுவேகமாக உயர்ந்தது.

டோலர் முகமது வீசிய 10ஆவது ஓவரில் அடித்து நொறுக்கினார் ஷேவாக். இரண்டு பவுண்டரிகள், இரண்டு சிக்சர்கள் அடித்துத் தூள் கிளப்பினார். இந்த ஓவரில் மட்டும் 24 ஓட்டங்கள் கிடைத்தன. 29 பந்துகளில் மிக வேகமாக அரைச் சதம் கடந்த ஷேவாக் 59 ஓட்டங்களுடன் (7 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள்) ஆட்டமிழந்தார். ரோகித் சர்மா 26 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார்.

அபார ஆட்டத்தைத் தொடர்ந்த கம்பீர் ஒருநாள் அரங்கில் தனது 5ஆவது சதத்தைக் கடந்து அசத்தினார். யுவராஜ் 26 ஓட்டங்களை எடுத்தார். இந்திய அணி 35.1ஆவது ஓவரில் 3 விக்கெட்டுகள் இழப்புக்கு 223 ஓட்டங்களை எடுத்து அசத்தல் வெற்றி பெற்றது. கம்பீர் 107 ஓட்டங்களுடன் (13 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர்) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

தனது இரண்டு லீக் போட்டியிலும் தோல்வியடைந்த பங்களாதேஷ் அணி தொடரிலிருந்து வெளியேறியது. இன்று நடக்கும் இறுதியாட்டத்தில் இந்திய அணி, பாகிஸ்தானைச் சந்திக்கிறது.




### 3ஆவது டெஸ்ட் போட்டி

## ஆஸ்திரேலிய அணி வீரர்கள் ஓட்டங்கள் குவிக்கத் திணறல்

பிரிட்ஜ்டவுண், ஜூன் 14

மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான 3ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டியில் ஓட்டங்களைக் குவிக்க ஆஸ்திரேலிய அணி திணறிவருகின்றது. நேற்றுமுன்தினம் நிறைவு பெற்ற போட்டியின் முதல்நாள் ஆட்டநேர முடிவில் முதலில் துடுப்பெடுத்தாடிவரும் ஆஸ்திரேலிய அணி 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 226 ஓட்டங்களைப் பெற்று மிகவும் இக்கட்டான நிலையில் உள்ளது.

தொடரைத் தீர்மானிக்கும் மூன்றாவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி நேற்றுமுன்தினம் பார்படோஸிலுள்ள பிரிட்ஜ்டவுணில் ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. ஆரம்பத்திலிருந்தே மேற்கிந்தியத் தீவுகளின் வேகங்கள் அசத்தலாகப் பந்துவீசி அச்சுறுத்தின. அதிரடியாக ஆடிய ஆரம்ப வீரர் பில் ஜக்கிஸ் (31), ரிக்கி பொண்டிங் (18), மைக்கல் ஹசே (12), மைக்கல் கிளார்க் (0), பிரட் ஹடின் (32), சைமண்ட்ஸ் (52) ஆகியோர் விரைவாக விக்கெட்டைப் பறிகொடுத்தனர்.

நேற்றுமுன்தினம் நிறைவுபெற்ற முதல் நாள் ஆட்டநேர முடிவில் ஆஸ்திரேலியா அணி 56.4 ஓவர்களில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 226 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. முதல்நாள் ஆட்டம் மழை காரணமாகப் பாதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஜேர்மனி அதிர்ச்சித் தோல்வி காலிறுதிக்குள் குரோஷியா

கிளகன்பர்ட், ஜூன் 14

யூரோ கிண்ணத் தொடரில் மிகப் பெரும் அதிர்ச்சி. நேற்றுமுன்தினம் நடந்த லீக் போட்டியில் மூன்று தடவைகள் சம்பியன் பட்டம் வென்ற ஜேர்மனி அணி, குரோஷியாவிடம் 1-2 என்ற கோல் கணக்கில் அதிர்ச்சித் தோல்வி அடைந்தது. இதன் மூலம் காலிறுதிக்கு குரோஷியா முன்னேறியது.

நேற்றுமுன்தினம் நடந்த 'பி' பிரிவு லீக் போட்டியில் ஜேர்மனி, குரோஷியா அணிகள் மோதின. இம்முறை ஜேர்மனி வீரர்களின் ஆட்டம் படுமந்தமாக இருந்தது. அதே நேரத்தில் குரோஷிய வீரர்கள் துடிப்பாக ஆடி ஆச்சரியம் அளித்தனர். ஆட்டத்தின் 24 ஆவது நிமிடத்தில் பிரான்ஜிக் கொடுத்த பரிமாற்றத்தைப் பெற்ற, டாரிஜோ சேர்னா அருமையான கோல் அடித்தார். இதையடுத்து குரோஷியா 1-0 என்ற முன்னிலை பெற்றது.


இரண்டாவது பாதியிலும் ஜேர்மனி வீரர்களின் ஆட்டத்தில் முன்னேற்றம் காணப்படவில்லை. 62ஆவது நிமிடத்தில் ஜேர்மனி கோல் காப்பாளர் ஜென்ஸ் லேமன் திணற, பந்து கோல் கம்பத்தில் பட்டு திரும்பியது. அதை அப்படியே இவிகா ஒலிக் திருப்பி அடிக்க, குரோஷியா 2-0 என்ற முன்னிலை பெற்றது. 79ஆவது நிமிடத்தில் பொடேரல்ஸ்கி ஒரு கோல் அடித்து ஜெர்மனிக்கு ஆறுதல் தந்தார்.

இறுதியில் குரோஷியா அணி 2-1 என்ற கோல் கணக்கில் வென்றது.

இரண்டு வெற்றிகளுடன் 6 புள்ளிகளைப் பெற்றுள்ள குரோஷியா காலிறுதிக்கு முன்னேறுகிறது. ஜேர்மனியின் காலிறுதி வாய்ப்புக் கேள்விக்குறியாகியுள்ளது.

# குவான்டனாமோவில் தடுப்புக் காவலில் உள்ளோர் அமெரிக்க நீதிமன்றங்களில் வழக்குத் தொடரலாம்

## உயர் நீதிமன்றம் முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பு



வாஷிங்டன், ஜூன் 14

கியூபாவிலுள்ள அமெரிக்காவின் குவான்டனாமோ தடுப்பு முகாமிலுள்ள சந்தேக நபர்கள் தாங்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளமைக்கு எதிராக அமெரிக்க நீதிமன்றங்களில் வழக்கு தாக்கல் செய்யலாம் என்று அமெரிக்க உயர் நீதிமன்றம் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பு ஒன்றை வழங்கியிருக்கிறது.

இந்தத் தீர்ப்புத் தொடர்பாக ஜனாதிபதி புஷ் மற்றும் முக்கிய அதிகாரிகள் ஏமாற்றம் தெரிவித்துள்ளனர். இதே வேளை மனித உரிமை அமைப்புகள் இதனை வரவேற்றுள்ளன. மேலும் இது புஷ் நிர்வாகத்திற்கான பாரிய சட்ட பின்னடைவாக கருதப்படுகின்றது.

அமெரிக்க ஜனாதிபதி புஷ், தான் இந்த தீர்ப்பை ஏற்றுக் கொள்ளவில்லையெனவும், எனினும் அதற்கு கட்டுப்பட போகின்றார் என்றும் தெரிவித்துள்ளார். மிகவும் ஆழமாக பிளவுபட்ட நீதிமன்றிலிருந்தே இந்தக் கருத்து வெளியாகியுள்ளது என்றும் இந்தத் தீர்ப்பை எதிர்த்தவர்களை தான் ஆதரிக்கின்றார் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

வெளிநாட்டுச் சந்தேக நபர்கள் அமெரிக்க நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்வதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளமை குறித்து சட்டமா அதிபர் மைக்கல் முகசேயும் ஏமாற்றம் வெளியிட்டுள்ளார். இனிவரும் காலங்களில் நூற்றுக்கணக்கானவர்கள் மனுத் தாக்கல் செய்யலாம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ஏற்கனவே கைவிடப்பட்ட பல வழக்குகளுக்கு இந்தத் தீர்ப்பு மீண்டும் புத்துயிர் அளித்திருக்கின்றது என்று மனித உரிமை ஆர்வலர்கள் தெரிவித்திருக்கின்றார்கள்.

# அறிவாளிகளுக்கு இறை நம்பிக்கை மிகக் குறைவாம்!

## பிரிட்டன் ஆய்வில் தகவல்

லண்டன், ஜூன் 14

சாதாரண மக்களுடன் ஒப்பிடுகையில் அறிவாளிகளுக்கு இறை நம்பிக்கை குறைவாகவுள்ளது என லண்டன் அல்ஸ்டெர் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். சமீபத்தில் தாங்கள் நடத்திய ஆய்வின் மூலம் இது தெரியவந்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அதிலும் பல்கலைக்கழகங்களில் பணியாற்றும் அறிஞர்களுக்கு இறை நம்பிக்கை மிகமிகக் குறைவு. தாங்கள் புத்திக் கூர்மையோடு திகழ்வதற்கு தங்களது திறனே காரணம்; இதற்கு வேறு காரணம் எதுவும் இல்லை என்றே பெரும்பாலான பிரிட்டிஷ் பல்கலைக்கழக பேராசிரியர்கள் உறுதியாகக் கூறியிருக்கின்றனர்.

பிரிட்டனில் ஆரம்பக் கல்வி பயில்பவர்கள் மத்தியில் இறை நம்பிக்கை அதிகம் உள்ளது. அவர்கள் வளர்ந்து அறிவு முதிர்ச்சிப் பெறப்பெறஅவர்கள் மத்தியில் இறை நம்பிக்கை மெதுவாகக் குறைய ஆரம்பித்து விடுகிறது.

பிரிட்டனில் 33 சதவீதத்தினர் மட்டுமே இறை நம்பிக்கை உள்ளனர் என்று தெரிவித்தனர். 68.5 சதவீதம் பேர்தான் இறை நம்பிக்கை தவிர்த்து வேறெந்த நம்பிக்கையும் இல்லை என தெரிவித்தார்கள் என இந்த ஆராய்ச்சிக் குழுவில் இடம்பெற்ற பேராசிரியர் ரிச்சாட் லைன் தெரிவித்தார்.

# சீனா - தலாய் லாமா தரப்புகள் ஜூலையில் மீண்டும் பேச்சு

பீஜிங், ஜூன் 14

திபெத் பிரச்சினை குறித்து தலாய் லாமாவின் பிரதிநிதிகளுக்குக்கும் சீன அரசுக்கும் இடையே இரண்டாம் கட்டப் பேச்சுகள், அடுத்த மாதம் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

எனினும் எந்தத் திகதியில் பேச்சு நடை பெறும் என்பது முடிவாகவில்லை என சீன அரசின் வெறியுறவு அமைச்சகச் செய்தித் தொடர்பாளர் கின்காங், பீஜிங் நகரில் செய்தியாளர்களிடம் கூறினார். மற்றைய நாடுகளுடன் சேர்ந்து பிரிவினைவாதச் செயல்களில் தலாய் லாமா ஈடுபடுவதை சீனா கடுமையாக எதிர்க்கின்றது என்றும் அவர் கூறினார்.

திபெத் பகுதியை 50 ஆண்டுகளுக்கு முன்பு சீனா ஆக்கிரமித்தது. திபெத்தியர்களின் ஆன்மீகத் தலைவரான தலாய்லாமா அங்கிருந்து இந்தியாவுக்குத் தப்பி வந்தார். இமாசலப் பிரதேசத்தில் உள்ள தர்மசாலா என்ற இடத்தில் அவர் தங்கியிருக்கிறார். சமீபத்தில் திபெத்தில் கலவரம் நடந்தது. சீன ஆக்கிரமிப்பை எதிர்த்து திபெத்தியர்கள் கலவரத்தில் ஈடுபட்டனர். அவர்களை சீன இராணுவம் ஒடுக்கியது.

திபெத்துக்கு விடுதலை வேண்டாம், தன்னாட்சி வழங்கினால் போதும், வெளியுறவுத் துறை, இராணுவம் போன்ற துறைகளை சீனாவே கவனித்துக் கொள்ளலாம் என்று தலாய் லாமா கோரி வருகிறார்.

தற்போது ஆஸ்திரேலியாவில் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருக்கும் தலாய் லாமா, சீன அரசுடனான அடுத்த கட்டப் பேச்சுகள் அடுத்த மாதம் நடக்கும் என்று சிட்னி நகரில் தெரிவித்தார். திபெத் பிரச்சினைக்குத் தீர்வு இதயத்தில் இருந்து வர வேண்டுமே தவிர, துப்பாக்கி முனையில் இருந்து வரக்கூடாது என்றும் அவர் கூறினார்.




# அமெரிக்க நாடாளுமன்றத்தில் புஷ்ஷை பதவி நீக்கும் தீர்மானம்

வாஷிங்டன், ஜூன் 14

அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷை பதவி நீக்கம் செய்யும் தீர்மானம் நாடாளுமன்றத்தின் பிரதிநிதிகள் சபையில் நேற்றுமுன்தினம் கொண்டு வரப்பட்டது.

எதிர்க்கட்சியான ஜனநாயகக் கட்சி உறுப்பினர் டென்னிஸ் குசினிஸ், இதைக் கொண்டு வந்தார்.

அச்சபையில் எதிர்க்கட்சியினர் பெரும்பான்மையாக இருப்பதால், இத்தீர்மானம் பெரும்பான்மை ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டது.

இதையடுத்து, இத்தீர்மானம், பிரதிநிதிகள் சபையின் நீதிபதிகள் கமிட்டிக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இனிமேல் அந்தக் கமிட்டியே விசாரணை நடத்தும் என்றும் ஆனால் அங்கு தீர்மானம் தள்ளுபடி செய்யப்படும் என்றும் கருதப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாத எதிர்ப்புக் கொள்கை விடயத்தில் பிரிட்டன் இரட்டை வேடம் என ஜனாதிபதி சாடல்

## 'பிரசார யுத்தத்தில் புலிகளிடம் தோற்றுவிட்டோம்' என்றும் கூறுகிறார்

லண்டன், ஜூன் 14

விடுதலைப் புலிகள் இயக்கத்தை பிரிட்டன் தடை செய்துள்ள அதேவேளை, அங்குள்ள இலங்கையர்களிடம் அது நிதி சேகரிப்பதற்கு அனுமதியளித்துள்ளது எனத் தெரிவித்திருக்கும் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, இதன் மூலம் பிரிட்டன் தனது பயங்கரவாத எதிர்ப்பு கொள்கை தொடர்பாக இரட்டை வேடமிடுகின்றது என்றும் குற்றம் சாட்டியிருக்கிறார்.

லண்டனிலிருந்து வெளியாகும் 'த டைம்ஸ்' பத்திரிகைக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இவ்வாறு தெரிவித்தார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

பிரிட்டிஷ் பிரதமர் கோர்டன் பிறவுணுடனான தமது சந்திப்பின் போதும் இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இவ்விடயம் குறித்து அவரது கவனத்தை ஈர்த்துள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டனிலுள்ள தமிழ் சமூகத்திடமிருந்து விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் வருடாந்தம் மில்லியன் கணக்கான பவுண்ட்ஸ்களைச் சேகரிக்கின்றனர். சிலர் நிதியுதவியை வழங்குமாறு பலவந்தப்படுத்தப்படுகின்றனர் என்றும் ஜனாதிபதி ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

பயங்கரவாதம் தொடர்பாக இரு வேறு அணுகுமுறை இருக்க முடியாது எனத் தெரிவித்துள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, 'நல்ல பயங்கரவாதிகள்', 'கெட்ட பயங்கரவாதிகள்' என்பதை நான் ஏற்றுக்கொள்வதில்லை. ஒரே வகையான பயங்கரவாதிகள் மாத்திரமேயுள்ளனர் என மேலும் தெரிவித்துள்ளார்.

பிரிட்டனில் ஒன்றரை லட்சம் தமிழர்கள் உள்ளனர். இவர்களில அனேகமானவர்கள் லண்டனிலேயே வாழ்கின்றனர் வருடாந்தம் ஏழு கோடி பவுண்ட்ஸ் இலங் கைக்கு அனுப்பப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இவை சுயவிருப்பின் பேரில் வழங்கப்படுபவையல்ல. நிதி வலுக்கட்டாயமாக வசூலிக்கப்படுகின்றது. தமிழர்களின் வருமானத்தின் ஒரு பகுதியாக இவை வசூலிக்கப்படுகின்றன எனத் தெரிவித்துள்ள ஜனாதிபதி ராஜபக்ஷ, இந்த நிதி ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதற்காக அனுப்பப்படுகின்றது என்றும் கூறுகிறார்.

மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்குத்தான் நடவடிக்கை எடுத்துள்ளார் எனத் தெரிவித்துள்ள ஜனாதிபதி மஹிந்த, விடுதலைப் புலிகளின் திறமையான பிரசாரமே தனது அரசின் நற்பெயர் சர்வதேச அளவில் பாதிக்கப்பட்டுள்ளமைக்குக் காரணம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## இளைஞனின் சடலம் கோயிலாக்கண்டியில் மீட்பு

யாழ்ப்பாணம், ஜூன் 14

தென்மராட்சி தெற்கு, கோயிலாக்கண்டி ஐயப்பன் கோயிலுக்கு அருகில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் இனந்தெரியாத இளைஞனின் சடலம் சாவகச்சேரி பொலிஸாரால் கண்டெடுக்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலை சவச்சாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதையடுத்து நீதிவான் விசாரணைகளை மேற்கொண்டார். (1-207-86-25)

# ஒன்றாகக் குவிக்கப்பட்ட படையணிகள் எல்லாம் தோல்வியைத் தழுவுகின்ற காலம் நெருங்கிவிட்டது

## எழிலன் கூறுகிறார்

கொழும்பு ஜூன் 14

''இலங்கை அரசின் போரிடும் ஆற்றல் கொண்ட படையணிகள் எல்லாம் இப் போது எம்மை சுற்றி நிற்கின்றன. எப்போது ஒரு ஆக்கிரமிப்புப் படை மக்கள் செறிந்து வாழும் பகுதிக்குள் நுழைகின்றதோ அப்போது அது தோல்வியை தழுவும் காலம் உருவாகின்றது. இதனையே அரச படைகள் எதிர்கொள்ளப் போகின்றன.'' புலிகளின் கொள்கை முன்னெடுப்பு பிரிவுப் பொறுப்பாளர் சி. எழிலன் இவ்வாறு தெரிவித்தார்.

பரந்தனில் நேற்று முன்தினம் நடைபெற்ற 'வீர முரசு' நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யாழ்ப்பாணத்தில் புலிகள் தாக்குதலை தொடுத்து, தரையிறங்குவார்கள் என்ற அச்ச உணர்வு இப்போது படைத்தரப்பை கிலி கொள்ளச் செய்துள்ளது. இதனால் யாழ். குடாக்கடலில் தொழிலாளர்கள் மீன் பிடிக்க படைத்தரப்பு தடை விதித்துள்ளது. அத்துடன், ஊரடங்குச் சட்ட நேரத்தை அதிகரித்து மக்களை சொல்லொண்ணா துன்பத்திற்குள்ளாக்கியுள்ளது.

இதனை விட சிங்கள மக்கள் வாழும் பிரதேசங்களில் மக்கள் பெரும் அச்ச உணர்வினை சந்தித்துள்ளனர். இவ்வா றான நிலையில் படைத்தளபதி சரத் பொன்சேகா விடுதலைப் புலிகளை அழிப்பதற்கு இன்னும் சற்றுத் தூரம் தான் உள்ளது என்று தெரிவித்துள்ளார்.

அன்று தலைவர் பிரபாகரனை அழித்து விட்டதாக இந்திய அரசு அறிவித்தது. ஆனால் அவரை அவர்களால் நெருங்கவே முடியவில்லை. இதேபோன்றதொரு செயற்பாட்டைத்தான் தற்போது சிங்கள மக்களுக்கு இலங்கை அரசு தெரிவித்துக்கொண்டிருக்கிறது.

விடுதலைப்புலிகளின் பலம் முன்பிருந்ததை விட தற்போது மேலோங்கிக் காணப்படுகிறது. எனவே எமது தலைவர் இலங்கை படைத்தரப்புக்கு பாடத்தை வெகு விரைவில் புகட்டுவார்.

நாம், இதுவரை பெறாத வெற்றி வாய்ப்பை இராணுவம் எமக்கு கொடுத்திருக் கின்றது. அது எவ்வாறு வந்துள்ளது எனில், அரசின் போரிடும் ஆற்றல் கொண்ட படையணிகள் எல்லாம் இப்போது எம்மை சுற்றி நிற்கின்றன என்பதால் ஆகும்.- என் றார் (சி)

## ஜி.சீ.ஈ. ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின்னர், அது குறித்து சம்பந்தப்பட்ட பாடசாலை அதிபர்களுக்கு எதிர்வரும் திங்கட்கிழமை அறிவிக்கப்படும் என்று பரீட்சைகள் திணைக்கள உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார். (சி)

## யாழ்.போதனா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆரம்பித்துள்ளனர்.

யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என் சண்முகலிங்கன் இச்சேவையை வைபவரீதியாக நேற்று ஆரம்பித்து வைத்தார்.

கணனி மற்றும் இலத்திரனியல் தொடர்பு சாதனங்களைப் பயன்படுத்தி உலகின் ஒரு பகுதியிலுள்ள மருத்துவர்கள், இன்னுமொரு பகுதியிலுள்ள மருத்துவர்களை தொடர்பு கொண்டு நோய், பராமரிப்பு தொடர்பான தகவல்களைப் பரிமாறுகின்ற ஒரு தொடர்பு முறையே தொலை மருத்து வமாகும்.

யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இச்சேவை இப்பகுதி மக்களுக்கு மருத்துவ சேவையை வழங்குவதில் இன்னுமொரு படிக்கலாக அமையும் என்று யாழ்.மருத்துவ சங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-1)

## ஆயுதங்களைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லண்டனில் நடைபெற்ற பொதுநலவாய மாநாட்டில் கலந்துவிட்டு நாடு திரும்பியுள்ள ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அங்கு வைத்து 'த ரைம்ஸ்' பத்திரிக்கைக்கு பேட்டி அளித்தார்.

அவர் அப்போது கூறியவை வருமாறு:

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு, இலங்கையின் உல்லாசப் பயணத்துறை பாதிக்கப்பட்டுள்ளமை போன்றவற்றின் மத்தியிலும் கூட நாம் விடுதலைப் புலிகளுடன் பேச்சுகளை ஆரம்பிக்கப் போவதில்லை. அதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம். அந்த அமைப்பு முதலில் ஆயுதங்களைக் கைவிட வேண்டும்.

விடுதலைப் புலிகள் தாங்கள் பலவீனமாக உள்ள சமயத்தில் சர்வதேச சமூகத்தை யுத்தநிறுத்தத்திற்கு ஏற்பாடு செய்யுமாறு கோருவார்கள். இக்காலப் பகுதியில் அவர்கள் மீண்டும் போரிடுவதற்காகத் தம்மைப் பலப்படுத்துவார்கள்.

இம்முறை அவர்கள் பேச்சுகளில் ஈடுபட விரும்பினால் முதலில் ஆயுதங்களைக் கைவிட வேண்டும். அவ்வாறு இல்லை என்றால் பேச்சுவார்த்தை என்ற பேச்சுக்கே இடமில்லை

விடுதலைப் புலிகள் இந்த முன் நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டாலும் கூட, விடுதலைப் புலிகளின் தலைவருடன் நான் சமாதான ஒப்பந்தம் எதனையும் செய்து கொள்ளமாட்டேன். ஒப்பந்தத்தை ஏற்படுத்துவதற்கான சந்தர்ப்பம் இல்லை.

''இந்த மனிதரும், அவரைச் சுற்றியுள்ள மூன்று நான்கு அடியாள்களும் இரத்த வெறி பிடித்தவர்கள். அவர்கள் உணர்வில்லாதவர்கள்'' என்று தெரிவித்தார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. (அ-உ)

## கனேடிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாணவரே கடந்த இருவாரங்களிற்கு முன் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கனடாவிலிருந்து இலத்திரனியல் உபகரணங்கள், இரசாயனப் பொருள்கள் கப்பல் மூலம் கொண்டுவரப்பட்டுள்ளன. இவை விடுதலைப் புலிகளுக்கு அனுப்பிவைக்கப்படும் நோக்கில் கொண்டுவரப்பட்டுள்ளனவா என்ற சந்தேகத்தின் பேரில் கஜன் இரம்பைமூர்த்தி கைதுசெய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (சி)

## நாடாளுமன்ற....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

தேசியப் பிரச்சினை தீர்க்கப்படாமல் நாடு அழிந்துகொண்டிருக்கும் நிலையில் அரசு மாகாண சபைகளைக் கலைத்துத் தேர்தல்களை நடத்தத் தீர்மானித்திருக் கின்றது.

இத் தேர்தல்கள் மூலம் எந்தப் பிரச்சினையும் தீரப்போவதில்லை. மேலும் மேலும் விலைவாசிதான் அதிகரிக்கும். தேசியப் பிரச்சினைகளைத் தீர்த்தால்தான் எல்லாப் பிரச்சினைகளையும் தீர்க்க முடி யும்.

அரசு உடனடியாக நாடாளுமன்றத்தைக் கலைக்க வேண்டும். கலைப்பதற் கான திகதியைத் தீர்மானிக்க அரசு எம் முடன் பேச்சு நடத்த முன்வரவேண்டும்.

இந்த அரசால் ஒருபோதும் தேசியப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது. தேசியப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காகவே யுத்தத்தில் ஈடுபடுகின்றோம் என்று கூறும் இந்த அரசு யுத்தத்தைக் காரணங்காட்டியே பொருள்களின் விலைகளையும் அதிகரிக் கின்றது.

பிழையான முறையில் இடம்பெறும் இந்த யுத்தம் பற்றிய உண்மைகள் ஊடகங்களில் வெளிப்படுத்தப்பட்டால் ஊடகவியலாளர்கள் மிரட்டப்படுகின்றனர்; கடத்தப்பட்டுத் தாக்கப்படுகின்றனர்.

இவ்வாறான ஊடகவியலாளர்களைத் 'தேசத் துரோகிகள்' என்று அரசு கூறுகின்றது. தொழிற்சங்கப் போராட்டம் நடத்துபவர்களை விரட்டியடிக்கின்றது. இவ்வாறான செயற்பாடுகள் மூலம் நல்லதொரு நாட்டை உருவாக்க முடியாது.

இந்த அரசைக் கவிழ்த்து நல்லதொரு அரசை உருவாக்கும் திட்டத்தில் நாம் இப்போது உள்ளோம். இதற்கான எமது போராட்டம் தீவிரமாகுமே தவிரக் குறையாது. - என்[illegible] (சி)

## 'ஹைஏஸ்'...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குகளில் ஆஜர் செய்யப்படுவதற்காக சுமார் 30 முதல் 40 கைதிகளுடன் சிறைச் சாலை வாகனம் நேற்றுக் காலை புறப்பட்டது.

மல்லாகம் நீதிமன்றத்துக்குரிய கைதிகளை அந்த நீதிமன்றத்தில் இறக்கிவிட்டு பருத்தித்துறை நீதிமன்றம் நோக்கி சிறைச்சாலை வாகனம் சென்று கொண்டிருந்தது.

சுன்னாகம் பொலிஸ் நிலையத்தைக் கடந்து, சுன்னாகம் - புன்னாலைக் கட்டுவன் வீதியில் வாகனம் சென்று கொண்டிருந்த போது, செக்கர் கந்தசாமி ஒழுங்கையில் இருந்து புறப்பட்ட 'ஹைஏஸ்' வாகனம் ஒன்று சிறைச்சாலை வாகனத்தை வழிமறித்தது. அப்போது அங்கு மோட்டார் சைக்கிளில் வந்த ஆயுததாரிகள் சிறைச் சாலை வாகனத்தில் ஏறி இருவரை நோக்கிச் சுட்டனர். இருவரும் வாகனத்துக்குள்ளேயே பிணமானார்கள்.

இந்த வாகனத்தில் இருந்த 18 சந்தேகநபர்களில் ஒருவர் காயமடைந்தார். ஆயுததாரிகள் வாகனத்தைக் கைவிட்டுத் தப்பிச் சென்றனர்.

சம்பவ இடத்துக்கு விரைந்த சுன்னாகம் பொலிஸார் கடத்தப்பட்ட 'ஹைஏஸ்' வானில் இருந்து, கை, கால்கள் கட்டப்பட்ட நிலையில் அதன் சாரதியை மீட்டனர்.

சிவராசா லெப்பின்ராஜ் (வயது 26- இராசகிராமம், கரவெட்டி), தங்கராசா சுலோஜன் (வயது 26 - இராஜகிராமம், கரவெட்டி) என்ற இரு கைதிகளுமே சுட்டுக் கொல்லப்பட்டவர்கள் என அடையாளம் காணப்பட்டனர்.

### ஒருவர் சந்தேக நபர்; மற்றவர் சரண் அடைந்தவர்

பருத்தித்துறையைச் சேர்ந்த குருக்கள் ஒருவரின் வீட்டில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவத்தின் சந்தேகநபர் சுலோஜன் ஆவார். மற்றவர் உயிர் அச்சுறுத்தல் காரணமாக சரண் அடைந்து நீதிமன்றப் பாதுகாப்பின் பேரில் சிறைச்சாலையில் வைக்கப்பட்டிருந்தவராவார்.

மற்றொருவழக்கின் சந்தேகநபரான ஜெரோமியஸ் ரகுபரன் (வயது-24, கரணவாய், கரவெட்டி) என்பவர் காயமடைந்துள்ளார்.

இச் சம்பவத்தில் சம்பந்தப்பட்ட ஆயுததாரிகள் மேற்படி 'ஹைஏஸ்' வானை யாழ். பிறவுண் வீதியில் இருந்து கடத்தி வந்துள்ளனர் என விசாரணையில் தெரிய வந்ததாம்.

ஒரு வீட்டுக்காரர் ஆலயத்துக்குச் செல்வதற்காக வாடகைக்கு அமர்த்திய இந்த வான், அவர்கள் வீட்டுக்கு முன் நிறுத்தப்பட்டிருந்த வேளை கடத்தப்பட்டுள்ளது.

மீட்கப்பட்ட வான் நீதிமன்ற உத்தரவின் பேரில் சுன்னாகம் பொலிஸ்நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மல்லாகம் நீதிவான் திருமதி. சறோஜினி இளங்கோவன் சம்பவ இடத்தில் விசாரணைகளை நடத்தினார்.

பிரேத பரிசோதனையின் பின் சடலங்களை உறவினர்களிடம் ஒப்படைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார்.

சடலங்கள் யாழ்.ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளன.

காயமடைந்தவர் யாழ்.ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்று வருகின்றார். (அ-1-86-25)

## மாகாண ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போட்டிகளை பிற்போடுமாறு ஆளுநர் கொமடோர் மொஹான் ஜெயவிக்கிரம மாகாண கல்வி அமைச்சு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

சமூக சேவைகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆளுநருடன் கலந்துரையாடியதைத் தொடர்ந்தே யாழ்.மாவட்ட மாணவர் போட்டிகளில் கலந்து கொள்ள வசதி செய்யப்பட்டுள்ளது. இந்தப் போட்டிகள் எப்போது நடைபெறும் என்ற விவரத்தை ஆளுநரே இன்று அறிவிப்பார் என்று மாகாண கல்வி அமைச்சு அதிகாரி ஒருவர் நேற்றிரவு உதயனுக்குத் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கியதாக போட்டிகளை நடத்த ஏற்பாடு செய்யப்படுகின்றது என்றும்-

தேசிய மட்டத்தில் பங்கு கொள்ளும் வீரர்களின் விவரங்களை இரண்டு வாரங்களுக்குள் வழங்க வேண்டியுள்ளதால் அதற்கு முன்னர் போட்டிகளை நடத்தி முடிக்க ஏற்பாடு செய்யப்படும் என்றும்- அந்த அதிகாரி தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட மாணவர்கள் வவுனியா சென்று திரும்புவதற்குத் தேவையான பாதுகாப்பு உத்தரவாதத்தை ஆளுநர் மூலம் பெறுவதற்கு முயற்சி எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித் தார்.

இதேவேளை-

சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை நேற்று சந்தித்த யாழ் மாவட்ட பாடசாலை மாணவ, மாணவிகள் மற்றும் ஆசிரியர்கள் மாகாண விளையாட்டுப் போட்டிகளில் தங்களால் கலந்து கொள்ள முடியாமற் போனதையிட்டு கவலை தெரிவித்ததுடன் தொடர்ந்து இந்நிலை நீடித்து வருவதாகவும் இதனால் தேசிய மட்ட விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ளும் போது தாங்கள் முகங்கொடுக்கின்ற சிக்கல்கள் குறித்தும் எடுத்துக் கூறினர்.

அதனைத் தொடர்ந்து மாகாண ஆளுநர் மற்றும் கல்வி அமைச்சுடன் உடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேற்கொண்ட நடவடிக்கைகளின் பயனாக இன்று வவுனியாவில் நடைபெறவிருந்த மாகாண பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள் பிற்போடப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-01)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிடெட் [illegible] வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 14.06.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org